பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 11 | வியாழக்கிழமை 27.09.2018 | கதிர் 326

இனிது ரகசியம் அல்ல!

அரசியல் கைதிகள் பற்றிய விவகாரம் பேசப்படும் காலம் என்பதால் அது குறித்து சில விடயங்களை இப்பத்தியில் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

இது காலியில் இடம்பெற்ற ஒரு கடற்புலித் தாக்குதல் தொடர்பான வழக்கு. குண்டு பக்கம் 03



# எமது பிரச்சினையை நாமே தீர்ப்போம் வெளிநாட்டுத் தலையீட்டை ஏற்கோம்!

## ஐ.நாவில் மைத்திரிபால திட்டவட்டம்

நியூயோர்க், செப். 27

"எமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு எம்மால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகளும் அர்ப்பணிப்புக்களும் மிக முக்கியமானவையாகும். எந்தவொரு வெளிநாட்டுத் தலையீட்டையும் அச்சுறுத்தல்களையும் ஒரு சுயாதீன நாடென்ற வகையில் ஏற்க நாம் தயாராக இல்லை." பக்கம் 14

# 9 உண்ணாவிரதக் கைதிகள் குறித்து 3 தினங்களுக்குள் தீர்க்கமான முடிவு

## ஏனைய அரசியல் கைதிகள் விடயத்திலும் விரைந்து செயற்படுவதாக அரசு உறுதி

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 27

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அரசியல் கைதிகள் குறித்தும் இரண்டொரு தினங்களில் தீர்க்கமான - சாதகமான முடிவொன்றை வழங்குவதாக சட்டமா அதிபர் ஜயந்த ஜெயசூரிய நேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் உறுதிபடத் தெரிவித்தார். பக்கம் 04

## வாலைச் சுருட்டினார் மைத்திரி உரை இறுதிநேரத்தில் மாற்றம்



கொழும்பு, செப். 27

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஐ.நா. உரை இறுதி நேரத்தில் மாற்றியமைக்கப்பட்டது என அமைச்சர் மனோ கணேசன் தகவல் வெளியிட்டுள்ளார்.

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத் தொடரில் ஜனாதிபதி மைத்திரி பக்கம் 04

## நல்லூரில் நேற்றுப் பேரெழுச்சியுடன் தியாகி திலீபனுக்கு சுடரேற்றி அஞ்சலி

### சகலரும் ஒற்றுமையுடன் திரண்டு அனுஷ்டிப்பு



எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 27

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வு யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் நல்லூரில் நேற்றுமிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

எந்த விதமான கட்சி பேதங்களுமின்றி பக்கம் 03

## வடக்கு-கிழக்குத் தலைமைகளுடன் ஒத்துழைத்துச் செயற்படத் தயார்!

### அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு



வவுனியா, செப். 27

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வடக்கு-கிழக்குத் தமிழ்த் தலைமைகளுடன் ஒத்துழைத்துச் செயற்படத் தயார் எனக் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

வவுனியா விபுலாநந்தாக் கல்லூரியின் விஞ்ஞான தொழில் பக்கம் 03

## யாழ்.பல்கலையிலும் திலீபனுக்கு நேற்று உணர்வுபூர்வமாக அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 27

ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிராக 12 நாட்கள் உணவொறுப்பில் ஈடுபட்டு வீர வரலாறாகிப் போன தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் (இராசையா பார்த்தீபன்) 31ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் காலை யாழ். பல்கலைக் பக்கம் 03



## நாமல் குமாரவின் திட்டம் அம்பலம்

கொழும்பு, செப். 27

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் பக்கம் 04

## மைத்திரி, மஹிந்த கொலைச் சதி; தெற்கு அரசியலில் கொந்தளிப்பு!

### இந்தியப் பிரஜைக்கான நிதியுதவி குறித்து பலகோணங்களில் சி.ஐ.டி. விசாரணை!

கொழும்பு, செப். 27

சி.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்டுள்ள இந்தியப் பிரஜை, இலங்கையில் 'பிரமுகர்கள் கொலை பக்கம் 03

## பொலிஸ்மா அதிபருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

### நாடாளுமன்றை உடன் கூட்டுமாறு கூட்டு எதிரணி வேண்டுகோள்

கொழும்பு, செப். 27

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை பக்கம் 03

## அமெரிக்க ஜனாதிபதியை சந்தித்தார் மைத்திரிபால



நியூயோர்க், செப். 27

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைச் சந்தித்துக் கலந் பக்கம் 04

## நிதி நிறுவனத்தில் கொள்ளை; பெண் பணியாளர் உட்பட 3 பேர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், செப். 27

சாவகச்சேரி நகர் தனியார் நிதி நிறுவனம் ஒன்றுக்குள் பக்கம் 03

காலைக்கதிர்
Kalaikkathir



# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் கிளிநொச்சியில் தியாகி தீலிபன் நினைவேந்தல்







கிளிநொச்சி, செப். 27

தியாகி திலீபனின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு ஆனந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க அலுவலகத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதன்போது, தியாகி திலீபனுக்கு மலர் வணக்கமும் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, கிளிநொச்சி, கந்தசுவாமி ஆலய முன்றிலிலும் தியாகி திலீபனின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வு திலீபன் உயிர் நீத்த நேரமான 10.48 மணியளவில் அஞ்சலியுடன் நிறைவடைந்துள்ளது.

இந்த அஞ்சலி நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கமும் இடம்பெற்றுள்ளது.

# புதுக்குடியிருப்பில் வணிகர் கழத்தின் தியாக தீபம் திலீபனின் நினைவு நிகழ்வு





12 நாள்களாக நீராகாரம் எதுவுமின்று உண்ணா நோன்பிருந்து வீரச்சாவை தழுவிக்கொண்ட ஈகைச் சுடர் தியாகி திலீபனின் 31 ஆம் ஆண்டு வணக்க நிகழ்வு புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதியில் புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் சிறப்புற நடைபெற்றுள்ளது.

வணிக நிலையங்களை மூடி அலங்கரிக்கப்பட்ட பந்தலில் திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு காலை 10 மணிக்குப் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தியுள்ளர்கள்.

இதில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த வணிக நிலைய உரிமையாளர்கள் ஓட்டோ உரிமையாளர்கள் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தினர்.

வணக்க நிகழ்வில் நினைவுரைகளைப் புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அ.அற்புதராசா, புதுக்குடியிருப்பு வணிகர் கழகத் தலைவர் செ.செல்வச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். (க – 81)

# மன்னாரிலும் இரு இடங்களில் திலீபனின் நினைவு நிகழ்வுகள்







மன்னாரில் இரு இடங்களில் தியாக தீபம் திலீபனின் 31 ஆவது ஆண்டு நினைவு நேற்று அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றிய அலுவலகத்தில் நேற்று முற்பகல் 10. 48 மணியளவில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இதன்போது தியாக தீபம் திலிபனின் உருவப்படத்திற்கு சுடர் ஏற்றி, மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மத தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதே வேளை, தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் நகர மண்டபத்திலும் தியாக தீபம் திலீபனின் 31 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு இடம் பெற்றது.

முற்பகல் 10.48 மணியளவில் திலீபனின் உருவப் படத்திற்கு சுடர் ஏற்றி, மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

# பருத்தித்துறையிலும் நேற்று தியாகி திலீபனுக்கு அஞ்சலி!



தியாகி திலீபனின் 31ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பருத்தித்துறையில் போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு முன்பாக நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பருத்தித்துறை மருத சிவன் கோவிலடி வளாகத்திலுள்ள நினைவுத்தூபிக்கு முன்பாக திலீபனின் திருவுருவப் படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, மாவீரர் ஒருவரின் தாயார் திலீபனின் திருவுருவப் படத்தில் முன்னால் ஈகச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

நினைவேந்தல் நிகழ்வில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், பருத்தித்துறை நகர, பிரதேச சபை, கரவெட்டிப் பிரதேச சபை ஆகியவற்றின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி!






தியாகி திலீபனின் 31 ஆம் ஆண்டு வணக்க நிகழ்வு நேற்று வடக்கு, கிழக்கு தமிழர் தாயக பகுதியெங்கும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

இந்த நிலையில், முல்லைத்தீவில் தமது பிள்ளைகளைத் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது போராட்ட நேற்று கொட்டகையில் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். (க – 81)

# ரவிகரனின் தொடர்பகத்திலும் நேற்று நினைவேந்தல் நிகழ்வு



தியாகச்சுடர் திலீபனின் இறுதி நாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் நேற்று இடம் பெற்றன.

அந்தவகையில் முல்லைத்தீவு – கள்ளப்பாடு, வடக்கு பகுதியிலுள்ள வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிரப்பட்ட படகு ஒன்றுடன் வந்து மோதித் தாக்குதல் நடத்திய போராளி ஒருவர் ஒரு காலை இழந்த நிலையில் கைது செய்யப்பட்டார். நீண்ட காலம் தடுப்புக் காவலில் இருக்கும் அவருக்காக சட்டத்தரணி கே.வி.தவராஜா நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் தமது வாதத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். அந்த வேளையில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு அதிகாரத்தில் இருந்தது.

*“நீதிபதி அவர்களே எனது கட்சிக்காரருக்கு எதிராக இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முக்கியமான – ஒரேயொரு – சாட்சியமான ஆதாரம், அவர் பொலிஸாருக்குவழங்கியதாகக்கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம். அந்த வாக்குமூலத்தை வைத்தே அவரைக் குற்றவாளி யாகக் கண்டு தண்டனை வழங்க முயற்சிக்கப்படுகின்றது. அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எனது கட்சிக்காரர் மட்டக்களப்பிலிருந்து இந்தத் தாக்குதலுக்குப் புறப்பட்டிருக்கின்றார் என்று அவர் கூறியிருக்கின்றார். மட்டக்களப்பில் இந்தக் கரும்புலித் தாக்குதலுக்குத் தாங்கள்புறப்பட்ட போதுதங்களை வந்து, கட்டிப்பிடித்து, வாழ்த்தி, பிரியாவிடை கொடுத்து அனுப்பியவர் புலிகளின் கிழக்குத் தளபதியாக இருந்த கருணா அம்மான். தாக்குதலுக்குஇந்தஇளைஞர்களை ஏவிவிட்ட கருணா போன்றோர் இன்று தேசியப் பட்டியல் எம்.பி, பிரதி அமைச்சர், ஆளும்சுதந்திரக் கட்சியின் உபதலைவர்களுள் ஒருவர். ஆனால், அவர்தூண்டிவிட்ட இளைஞர்ஒருகாலையும் இழந்து, பலஆண்டுகளாகவிசாரணையின்றி காவலில்.”*–என்றார்கே.வி.தவராஜா.

உம்’மென்று கேட்டு நீதிபதியால் நச்சுக் கொட்ட முடிந்ததே தவிர, அதற்கு அப்பால் ஏதும் செய்ய முடியவில்லை.

அது போன்ற மற்றொரு சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். இந்த வழக்கில் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையானார். விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் குறித்துத் தகவல் தெரிந்திருந்தும் அது பற்றி பொலிஸாருக்குத் தெரியப்படுத்தவில்லை, அந்தப் புலி உறுப்பினருக்குஉணவளித்துபராமரித்தமை போன்ற குற்றச்சாட்டுகள் ஒரு வயோதிபத் தம்பதியர் மீது சுமத்தப்பட்டிருந்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் எட்டுப் பத்து வருடம் தடுப்புக் காவலில் அவர்கள் வைக்கப்பட்டிருந்தனர்.

ஒரு தடவை வழக்கு நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட போது சட்டத்தரணி சுமந்திரன் ஒரு விடயத்தை நீதிமன்றுக்குச் சுட்டிக் காட்டினார்.

*“இந்தத் தம்பதியினரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. புலி உறுப்பினர் ஒருவரைப் பெயர் குறிப்பிட்டு, அவரை உணவளித்துப் பராமரித்தனர் என இவர்கள் மீது குற்றச்சாட்டு. அந்தப் புலி உறுப்பினர் கைதாகி, புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுதலையாகி நீண்ட காலமாகி விட்டது. அவர் தம்மைப் பராமரித்த இந்த வயோதிப தம்பதியினரின் நலனைக் கவனிப்பதற்காக இன்று இந்த நீதிமன்றுக்கு வந்து பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருக்கின்றார். அவருக்கு உணவளித்த குற்றச்சாட்டுக்கு உள்ளான தம்பதியர் இன்னும் உள்ளே இருக்கின்றனர். இதுதான் இலங்கையின் நீதி முறைமை”* – என்றார் விசனத்துடன்.

அதைக் கேட்ட நீதிபதி அன்றே அந்தத் தம்பதியருக்கு ஒரு தொகை தண்டப் பணம் விதித்து விடுதலை செய்தார்.

இதுதான் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழானவிசாரணை நிலைமை. அம்பை எய்தவர்கள் எங்கோ இருக்க, அம்புகள் மீதுதான் சட்டம் பாய்கின்றது.

மிக முக்கிய குற்றச் சம்பவங்கள் என்று கூறப்படுகின்ற கதிர்காமர் கொலைச் சம்பவம், ஜனாதிபதி சந்திரிகா மீதான தாக்குதல் முயற்சி போன்றவற்றில் எல்லாம் பிரதான சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் வரவில்லை. தூர, எடு பிடியாகச் செயற்பட்டவர்கள் என்று கூறப்படுவோரைத்தான் நீண்ட காலம் தடுத்து வைத்துக் கொண்டு பந்தா’ காட்டுகிறது கொழும்பு.

இந்தக் கைதிகளுக்கு நீதி என்றுதான் கிடைக்கப் போகிறது?

-மின்னல் -

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சூழ்ச்சி’ குறித்து எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினரைக் கொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டப்பட்டிருந்தது தனக்குத் தெரியும் என சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டுள்ள இந்தியர் ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார் என நேற்றுமுன்தினம் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் களுத்துறையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கருத்து வெளியிட்டார்.

மேசில் தோமஸ் என்ற இந்தியப் பிரஜையே சி.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்டுவிசாரிக்கப்பட்டு வருகிறார். 2017 ஆம் ஆண்டு இலங்கை வந்துள்ள இவர் பல பகுதிகளிலும் வசித்துள்ளார். இவருக்கான நிதி எவ்வாறு கிடைத்தது என்பதை இன்னும் கண்டறியமுடியாமலுள்ளது. அதுதொடர்பில்விரிவாகஆராயப்பட்டு வருகின்றது.

பிரமுகர்கள் கொலைச்சூழ்ச்சி குறித்து அவர் புதிதாக எவ்வித தகவலையும் வெளிப்படுத்தவில்லை. நாமல் குமாரவுடனான உரையாடலை மையப்படுத்தியே – அவரால் உச்சரிக்கப்பட்டுள்ள பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார் என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.(ஐ)

## பொலிஸ்மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டுவர உள்ளதாக மஹிந்த அணியான கூட்டு எதிரணி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டு எதிரணியின் தலைவர் தினேஸ் குணவர்தன இவ்வாறு கூறினார்.

மஹிந்த குடும்பத்தினரைக் கொலைசெய்யமேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் அம்பலமாகியுள்ளது. எனவே, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவரத் தீர்மானித்துள்ளோம். அதனால் நாடாளுமன்றம் உடனடியாகக் கூட்டப்பட்ட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.(ஐ)

### தாயார் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து

# வீடு தேடி விசாரிக்க வந்த பொலிஸார் வாளுடன் மகனைக் கைது செய்தனர்

யாழ்ப்பாணம், செப். 27

சுமார் 4 அடி நீளம் கொண்ட கூரிய வாள் ஒன்றை வீட்டில் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில்கைது செய்யப்பட்ட இளைஞனை வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மகனின் அச்சுறுத்தல் தொடர்பில் தாயார் வழங்கிய முறைப்பாடு தொடர்பில் அவரது வீட்டுக்குச் சென்றிருந்த பொலிஸாரே வாளை மீட்டதுடன், சந்தேகநபரையும் கைது செய்தனர் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார்.

கோண்டாவில் பகுதியில் வசிக்கும் தாய் ஒருவர் தனது மகனால் தனக்கு அச்சுறுத்தல் என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடந்த வாரம் முறைப்பாடு செய்துள்ளார். தன்னுடன் மகன் முரண்படுகிறார் எனவும் அது தனக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தாயார் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

குடும்பப்பெண்ணின் முறைப்பாடு தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட அவரது மகனிடம் வீடு தேடிப் பொலிஸார்சிலர்விசாரணைக்குச் சென்றிருந்தனர்.

அங்கு கூரிய வாள் ஒன்று மீட்கப்பட்டது. அதனை தனது உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படாத நிலையில் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடவேண்டும் என்று பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர். சந்தேகநபர் அயலில் உள்ள ஆலயத்தின் வழிபடுவோர் சபை உறுப்பினராக உள்ளார். அந்தஆலயத்தில் அண்மையில் நவ ராத்திரி வழிபாடுகள் ஆரம்பமாக உள்ளன.

நவராத்திரி நிறைவு நாளின் மானம்பூத் திருவிழா இடம்பெறவுள்ளது. அந்தத் திருவிழாவின் போது வாழைவெட்டு உற்சவம் இடம்பெறும். அதற்குப் பயன்படுத்தும் ஆலயத்துக்குரிய வாள்தான் பொலிஸாரால் சந்தேகநபரின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டது.

அந்த வாளை தோய்ந்து (சீரமைத்து) அதனை ஆலயத்துக்கு வழங்க என வீட்டுக்கு எடுத்து வந்து வைத்திருந்தார். சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்கவேண்டும் என்று சந்தேகநபர்சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வே.விஜயரட்ணம் மன்றில் கூறினார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று சந்தேகநபரை வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (ஐ)

# கைது செய்யப்பட்ட இந்தியர் மனநிலை பாதிக்கப்பட்டவர்

### இந்தியத் தூதரகம் கூறுகிறது

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்யும்முயற்சியுடன்தொடர்புபட்டவர் எனக் கைது செய்யப்பட்டுள்ள இந்தியர் 2000 ஆண்டு முதல் மனநிலை பாதிக்கப்பட்டவர் எனக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் முக்கிய தலைவர்களின் உயிர்களுக்கு ஆபத்தைஏற்படுத்தும்முயற்சியுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஊடகங்களில் வெளியான தகவல்களைப் பார்த்துள்ளதாக இந்தியத் தூதரகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து முக்கிய கவனம் செலுத்திய நாங்கள், இலங்கை அதிகாரிகள் வழங்கிய சிறிய தகவல்களை வைத்துக் கொண்டு குறிப்பிட்ட நபரின் பின்னணி குறித்து ஆராயுமாறு இந்திய அதிகாரிகளைக் கேட்டோம் எனவும் தூதரக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– முன்னுரிமைகளின்றி உணர்வுபூர்வமாக நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நல்லூர்கந்தசுவாமிஆலயத்தின் வட கிழக்கு மூலையில் தியாக தீபம்திலீபன்உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த இடத்தில் மிகச் சரியாக 10 : 48 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. அந்த வேளையில் கைதடியில் இருந்து இரண்டு தூக்குக் காவடிகளில்வந்து இரு உணர்வாளர்கள் தங்கள் அஞ்சலியைச் செலுத்தினர்.

தொடர்ந்து தியாகி திலீபன் நினைவாலயம் அமைந்துள்ள பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. கலந்துகொண்ட அனைவரும், ஒற்றுமையுடன் உணர்வுபூர்வமாக நிகழ்வுகளை முன்னெடுத்தனர்.

மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் முதன்மைச் சுடரேற்றியதுடன், தியாகி திலீபனின் உருவப் படத்துக்கு மலர் மாலை சூடி அஞ்சலி செய்ததைத் தொடர்ந்து, கலந்துகொண்ட அனைவரும் தமது அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில், யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரமுகர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்கள், மூத்த முன்னாள் போராளி மனோகர் (காக்கா அண்ணன்), ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரமுகர்கள் உட்பட பெருமளவான முன்னாள் போராளிகள், உள்ளூராட்சிச் சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.(ஐ-7)

## பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கத்திமுனையில் இடம்பெற்ற சுமார் 18 லட்சம் ரூபா கொள்ளைச் சம்பவம் தொடர்பில் அந்த நிறுவனத்தின் பெண் பணியாளர் உட்பட மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி நகர் நெடுஞ்சாலையிலுள்ள நிதி நிறுவனம் ஒன்றில் கடந்த 19ஆம் திகதி புதன்கிழமை காலை வழமைபோல பணிகளை ஆரம்பித்த பணியாளர்கள், பாதுகாப்புப் பெட்டகத்தில் இருந்த 18 இலட்சத்து 91 ஆயிரத்து 21 ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிடுவதற்காக எடுத்துள்ளனர்.

இதன்போது கத்தியோடு உள்நுழைந்த கொள்ளையர் ஒருவர், அங்கிருந்தோரை அச்சுறுத்திப் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நிதி நிறுவனத்தின் காசாளரான பெண் பணியாளர் ஒருவரால் திட்டமிட்டு இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது என விசாரணைகள் மூலம் தெரியவந்தது.

அது தொடர்பில் யாழ்ப்பாணம் – நல்லூர் அரசடிப் பகுதியைச் சேர்ந்த அந்தப் பெண் பணியாளரிடம் விசாரணை நடத்தப்பட்டது. அதனடிப்படையில் அவரது இரண்டு நண்பர்களே கொள்ளையிடுவதற்கு நிதி நிறுவனத்துக்கு வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் நிதி நிறுவனத்துக்குள் கத்தியுடன் புகுந்து கொள்ளையில் ஈடுபட்டார் என்று தெரியவந்தது.

அதனடிப்படையில் நிதி நிறுவனத்தின் பெண் பணியாளர் உட்பட மூவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ-7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நுட்ப ஆய்வுகூடத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நல்லாட்சியில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்ந்து இழுத்தடிக்கப்படாது இப்பிரச்சினையை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரும் வகையில் செயற்படவேண்டும் என்றும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.(ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கழகத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கி.கிருஸ்ணமீனன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் காலை 10.48 மணிக்குப் பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தரும், விஞ்ஞான பீடாதிபதியுமான கலாநிதி பிரின்ஸ் ஜெயதேவன் பொதுச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்த நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உட்பட கலந்துகொண்ட அனைவரும் மலர் சூடி தியாக தீபத்துக்கு அஞ்சலி செலுத்தினர். விரிவுரையாளர்கள், மாணவர்களின் நினைவுரைகள் இடம்பெற்ற அதே நேரம் தியாகி திலீபனின் அகிம்சைப் போராட்ட வரலாற்றை விளக்கும் காணொலிகளும் காட்சிப்படுத்தப்பட்டன.(ஐ-7)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஜனாதிபதியின் வாய்ப் பந்தல்

**நாங்கள் எங்கள் வேலையைப் பார்க்கின்றோம். எங்கள் விடயங்களில் தலையிடாமல் தள்ளி நின்று நாங்கள் எங்களது வேலையைப் பார்க்க அனுமதியுங்கள்**

**– ஐ.நா. பொதுச்சபையில் நேற்றுமுன்தினம் மாலையில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி அங்கு உலகத் தலைவர்களுக்கு விடுத்த செய்தி இதுதான்.**

**யுத்தக் குற்றச்சாட்டுகள், அது தொடர்பான சர்வதேசப் பங்களிப்புடனான விசாரணைகள் என்று பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கும் இலங்கைப் படையினரை அந்தச் சிக்கல்களில் இருந்தெல்லாம் விடுவிக்கும் அறிவிப்பு ஒன்றை – பொறிமுறையை – ஐ.நா. பொதுச் சபை உரையில் விடுப்பேன் என்று மிக அண்மையில் கூட கோடிகாட்டியிருந்த இலங்கை ஜனாதிபதியின் அந்த அறிவிப்பு இதுதான்.**

**அதாவது, எங்கள் நாட்டு விடயங்களை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம், நீங்கள் தள்ளி நில்லுங்கள் என்று சர்வதேசத் தலைவர்களைப் பார்த்து இலங்கை அரசுத் தலைவர் பகிரங்கமாகக் கோரினால் இந்தச் சிக்கல் தீர்ந்து விடும் என்பதுதான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்கருத்துப் போலும்.**

**யுத்தக் குற்றச்சாட்டுகள், அவற்றையொட்டிய சர்வதேச விசாரணைகள் என்ற சிக்கல்கள் எல்லாம் மைத்திரி அரசு மீது சுமத்தப்பட்டது 2015 மார்ச்சிலாகும்.**

**இலங்கையில் யுத்த காலத்தில் இடம்பெற்ற வன்முறைகள் குறித்து விசாரணை செய்ய ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு இலங்கையில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் எல்லாம் தாராளமாக இழைக்கப்பட்டுள்ளன என்று அறிக்கையிட்டு நீண்டகாலமாகிவிட்டது.**

**அந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசு தானே நீதி, நியாயமான விசாரணைகளை நடத்த வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கையை விநயமாக வேண்டி, அதற்காகக் காத்திருந்தும் நீண்டகாலம் கடந்துவிட்டது.**

**அந்தக் கால தாமதத்தின் பின்னர்தான் இந்த விடயத்தில் சர்வதேச பங்களிப்புடனான விசாரணைக்குத்தான் இணங்குவதான ஏற்பாட்டுக்கு இலங்கை இறங்கி வந்தது.**

**யுத்த காலக் கொடூரங்களுக்கான நீதி விசாரணைக்கு சர்வதேச அழுத்தம் உச்சமடைந்ததைத் தொடர்ந்தே அந்த இணக்கத்துக்கு வரவேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டது.**

**அத்தகைய சர்வதேச பங்களிப்புடனான நீதி விசாரணைக்கு வழி செய்யும் ஒரு பிரேரணையைத் தானும் சேர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் முன்மொழிந்து , அனுசரணை வகித்து, ஏகமனதாக நிறைவேற்றும் கைங்கரியத்தை இலங்கை அரசே முன்னின்று முன்னெடுத்தது.**

**2015 ஜனவரியில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசு 2015 மார்ச் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இந்தப் பிரேரணையை முன்மொழிந்து, ஏகமனதாக ஏற்கவைத்து, அன்றைய நிலையில் தனக்கு வந்த சர்வதேச அழுத்தத்தைச் சமாளித்துக் கொண்டது.**

**ஆனால் அப்போது வழங்கப்பட்ட இரண்டு வருட காலக்கெடுவில் இது விடயமாக எதுவும் செய்யாத கொழும்பு அரசு 2017 மார்ச்சில் இந்த விவகாரம் மீண்டும் கழுத்தைச் சுற்றியபோது மேலும் இரண்டு வருடகால அவகாசம் கோரியது.**

**அதற்கான பிரேரணையையும் இலங்கையே முன்னின்று, முன்மொழிந்து அனுசரணை வகித்துக் கொண்டு வந்து நிறைவேற்றியது.**

**அதாவது யுத்தக் குற்றங்கள் குறித்து முதலில் நீதி, நியாயமான விசாரணை நடத்தும் பொறுப்பு இலங்கை அரசுக்கே வழங்கப்பட்டது. யுத்தம் முடிந்து ஐந்தரை ஆண்டுகளாகியும் இலங்கை அதைச் செய்யவில்லை. செய்ய மறுத்து நின்றது. அதன் பின்னர் சர்வதேச அழுத்தம் தீவிரமடைந்தபோது அதைச் சமாளிக்க சர்வதேச பங்களிப்புடன் நீதி விசாரணை இரண்டு வருட காலத்துக்குள் என்ற தீர்மானத்தை முன்வைத்து தப்பியது. அதையும் செய்யத் தவறி மேலும் இரண்டு வருட கால அவகாசம் கோரிப் பெற்று, இப்போது அந்த கடைசி இரண்டு வருட கால அவகாசமும் இன்னும் ஆறு மாதகாலத்தில் முடிய இருக்கையில் – உருப்படியாக எதுவுமே செய்யாமல் விட்டுவிட்டு – இப்போது புதுக்கதை விடுகின்றது.**

**நாங்கள் எங்கள் வேலையைப் பார்கிறோம். அதில் தலையிடாமல் தள்ளி நில்லுங்கள் – என்ற பாணியிலான கருத்தை நல்ல சொல்லாடலில் முன்வைத்திருக்கின்றார் ஜனாதிபதி.**

**நமது நாட்டில் தேசிய நல்லிணக்கமும் ஒற்றுமையும் பலப்பட்டிருப்பதாக சர்வதேச சபையான ஐ.நா. மன்றத்தில் போய் இப்போது பெருமை பேசும் இலங்கை அரசுத் தலைவர் தமது அந்தக் கூற்று சரியானதா என்பதைத் தனது நெஞ்சைத் தொட்டுக் கூறவேண்டும்.**

**புலிகளின் போராட்டத்தை ஆயுத முனையில் வெற்றி கண்டாயிற்று என்பதன் அர்த்தம் நாட்டில் ஐக்கியமும் ஒற்றுமையும் தேசிய நல்லிணக்கமும் பலப்பட்ட விட்டன என்பதல்ல.**

**யுத்தக் காலக் குற்றங்கள் தொடர்பில் நீதி, நியாயமான விசாரணைகளை. சர்வதேச நியமங்களுக்கு அமைய முன்னெடுத்து, உண்மைகளைக் கண்டறிந்து, குற்றமிழைத்தோரை அடையாளப்படுத்தி, அந்த உண்மைகளின் மீது நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்பினால் மட்டுமே இலங்கையில் தேசிய நல்லிணக்கமும், ஒற்றுமையும் வலுப்படும்.**

**மனித உரிமைகள் விடயத்தில் செய்யவேண்டிய அடிப்படைகளைக் கூடச் செய்யாமல் ஐ.நா. பொது மன்றத்தில் வெறும் வாய் பந்தல் போடுவது சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தாது. அனைத்துலக சமூகம் அப்படி ஒன்றும் ஏமாளி அல்ல என்பதை அரசுத் தலைவர் உணர்ந்து கொள்வது நல்லது.**

### நாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

கோட்டாபய ராஜபக்ஷவையும் வறக்காபொலைப் பகுதிக்கு வரவழைப்பதற்கு நாமல்குமார பலதடவைகள் முயற்சித்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவையும் கொலை செய்வதற்கு சூழ்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் – அதற்குத் திட்டம் தீட்டினார் எனக் கூறப்படும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க சில்வாவின் குரல் பதிவையும் பகிரங்கமாக அம்பலப்படுத்தி தெற்கு அரசியலில் பெரும் புயலைக் கிளப்பிவிட்டுள்ளார் ஊழல் எதிர்ப்பு அமைப்பின் செயற்பாட்டுப்பணிப்பாளர் நாமல் குமார.

இது தொடர்பில் உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதுடன், நாமல் குமாரவுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆளும், எதிரணி அரசியல் உறுப்பினர்களும் பல கோணங்களில் கருத்துகளை வெளியிட்டுவருகின்றனர். இந்நிலையில் இதற்குச் சமாந்தரமாக இந்தியப் பிரஜையொருவரும் கைது செய்யப்பட்டுள்ளதால் பலகோணங்களில் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

வறக்காபொலை பகுதியில் விகாரை திறப்பு விழாவொன்றுக்காக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவையும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரையும் பங்கேற்க வைப்பதற்கு நாமல் குமார முயற்சித்துள்ளார். இதற்காகக் கேகாலைப் பகுதியிலுள்ள கூட்டு எதிரணியின் இளம் எம்.பி. ஒருவரின் உதவியையும் அவர் நாடியுள்ளார். நாமல் குமாரவின் கோரிக்கைக்கு அவர் சாதகமான பதிலை வழங்காததால், பிரதமரை அழைத்து இந்த நிகழ்வை நடத்தப்போவதாகக் குறிப்பிட்டுள்ளார். மூன்றரை மாதங்களுக்கு முன்னரே இந்தத் திட்டத்தை நாமல் குமார வகுத்துள்ளார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

### அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துரையாடியுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையின் 73 ஆவது அமர்வில் பங்கு கொள்வதற்காக அமெரிக்காவுக்கு சென்றுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க் நகருக்குச் சென்றுள்ள அனைத்து அரச தலைவர்களுக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஏற்பாடு செய்த விசேட இராப்போசன விருந்துபசாரத்தின்போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது அமெரிக்க ஜனாதிபதியின் துணைவி மெலினியா டிரம்ப் மற்றும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் துணைவியார் ஜெயந்தி சிறிசேன ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

### 9 உண்ணாவிரதக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் ஏனைய அரசியல் கைதிகள் தொடர்பிலும் விரைவில் உறுதியான தீர்மானம் ஒன்றை ஜனாதிபதியுடன் பேசி எடுப்பது எனவும் இணக்கம் காணப்பட்டது.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் உட்பட சகலதமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆராய்வதற்கான முக்கிய கூட்டம் ஒன்று நேற்று அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் கூட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

அரச தரப்பில் பிரதமருடன் நீதியமைச்சர் திருமதி தலதா அத்துக்கோரள, சட்டமா அதிபர் ஜயந்த ஜெயசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் பங்கேற்ற கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், அரசியல் கைதிகளின் விவகாரம் 10 வருடங்களை கடந்த 10 வருடங்களாக இழுபட்டுச் செல்கிறது. ஜே.வி.பினருக்குப் பொது மன்னிப்பு வழங்கியதுபோல தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பை அரசு வழங்கியிருக்க முடியும். ஆனால் இந்த விடயத்தில் அரசு தொடர்ச்சியாக இழுத்தடிக்கும் போக்கில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றமையை ஏற்கமுடியாது என்று காரசாரமாகக் கருத்து வெளியிட்டார்.

இதற்குப் பதில் அளித்த சட்டமா அதிபர் ஜயந்த ஜெயசூரிய, அரசியல் கைதிகளின் பெரும் பகுதியினர் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். பாரதூரமான குற்றமிழைந்தவர்களே உள்ளனர் – என்றார்.

இதற்குப் பதிலடி கொடுத்த சம்பந்தன், விசேட நீதிமன்றம் ஒன்று அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டது. மூன்று வருடங்கள் கடந்தும் அங்கு ஒரு வழக்குக் கூட நடத்தப்படவில்லை. பாரதூரமான குற்றச்சாட்டுக்களுடன் பெரிதாகத் தொடர்பில்லாதவர்கள் மீதாவது விசாரணை நடத்தியிருக்கலாம். அரசியல் கைதி ஒருவரின் வழக்கு ஐந்து வருடங்களாக விசாரணைக்கே எடுக்கப்படாமல் உள்ளது என்று விசனத்துடன் கருத்து முன்வைத்தார்.

இதன்போது கருத்து கூறிய சட்டமா அதிபர், அரசியல் கைதிகள் சகலருடைய கோவைகளையும் பார்வையிட்டு அவர்கள் தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்த உள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

உடனே குறுக்கிட்ட சம்பந்தன், கோவைகளைப்பார்வையிடுவதில் தொடர்ந்தும் காலத்தை கடத்துவதை விடுத்து நடவடிக்கைகளே தேவை என வலியுறுத்தினார்.

இதனையடுத்து இந்தச் சந்திப்பில் மூன்று முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

★ உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள ஒன்பது அரசியல் கைதிகள் தொடர்பிலும் இரண்டொரு தினங்களில் தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

★ வழக்குத்தாக்கல் செய்யப்படாமல் உள்ளவர்கள் உட்பட ஏனைய அரசியல் கைதிகள் தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நீதியமைச்சில் கூட்டம் ஒன்றை நடத்துவது எனவும் அதில் நீதியமைச்சர், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி., சட்டமா அதிபர் ஆகியோர் பங்கேற்று முடிவொன்றை எடுப்பது எனவும் கூறப்பட்டது.

★ பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குவது குறித்து ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் அவருடன் பேச்சு நடத்தி அரசியல் தீர்மானமொன்றை மேற்கொள்வது என பிரதமர் ரணில் யோசனை முன்வைத்தார்.

தண்டனை பெற்ற அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டால் அவர்கள் தமது மேன்முறையீடுகளை மீளப் பெறத் தயாராகவுள்ளனர் என சுமந்திரன் எம்.பி. எடுத்துரைத்தார்.

ஜனாதிபதியுடன் இணைந்து இது குறித்துப் பேசி முடிவு எடுப்பது என நேற்றைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. (ஐ)

### வாலைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

பால சிறிசேன உரையாற்றி முடித்த பின்னரே நேற்று அதிகாலை அமைச்சர் மனோவினால் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து மனோ கணேசன் தனது முகநூல் பதிவில் தெரிவித்துள்ளவை வருமாறு வருமாறு:-

அமைச்சர் மனோ கணேசன் என்ன, என் உரையில் சர்ச்சை எதுவும் இல்லைத்தானே! இப்போது திருப்திதானே?

ஐ.நா. சபையில் உரை நிகழ்த்தி இறங்கி வந்ததும் அமைச்சர்கள் குழு ஜனாதிபதியைச் சூழ்ந்த போது, என்னை அழைத்த ஜனாதிபதி மைத்திரி, என் தோளில் கைகளைப் போட்டவாறு இப்படி கேட்டார்.

ஜெனீவாத்தீர்மானத்தைஎதிர்த்துப் பேசி அதில் திருத்தம் செய்ய வேண்டும் என ஜனாதிபதி மைத்திரி, ஐ.நா. சபையில் தனது உரையின்போது கோரிக்கை முன்வைக்கப் போகிறார் என இலங்கையில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

இந்நிலையில், அப்படி சர்ச்சைக்குரிய கருத்துக்கள் எதுவும் ஜனாதிபதியின் உரையில் இடம்பெறவில்லை. வழமையாக இலங்கையிலே பேசும் கருத்துகளையே ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

ஆக, போர் முடிந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், இனிமேல் சர்வதேசம் எனது நாட்டைப் புதிய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்று மேலதிகமாகக் குறிப்பிட்டார்.

அந்த புதிய கண்ணோட்டம் என்னவென்று நீங்கள் இங்கே கூறவில்லை. நல்லது. அது என்னவென்று ஊருக்குப் போய் விளக்கமாக சொல்லுங்கள் ஜனாதிபதி அவர்களே என்று நான் கிண்டலாக சொல்ல, அனைவரும் சிரித்தார்கள்.

(உண்மையில் ஜனாதிபதி ஆற்ற வந்த உரை இதுவல்ல. ஆனால், இறுதித் தினங்களில் உரை வடிவம் மாற்றப்பட்டது. அது எப்படி, ஏன் என்ற விவரங்களைப் பகிரங்கமாகச் சொல்ல முடியாது. சொன்னாலும் பலருக்குப் புரியாது) – என மனோ பதிவிட்டுள்ளார்.

அமெரிக்கா புறப்பட ஒருவார காலத்துக்கு முன்னர் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்த மைத்திரி, பொதுச்சபையில் விசேட பொறிமுறையொன்றை முன்வைக்கப் போவதாகச் சொல்லியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### நாளை

28.09.2018
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: பரணி பி.இ. 3.09 வரை
திதி: திருதியை மு.ப. 8.48 வரை
சுபநேரம் : 6.02 – 7.32 வரை
இராகுகாலம் : 07.32 – 9.02 வரை

# 2025ஆம் ஆண்டில் செல்வந்த நாடாக இலங்கையை மாற்றியமைக்க முடியும்!



## அமைச்சர் மங்கள நம்பிக்கை

கொழும்பு, செப். 27

2025 ஆம் ஆண்டில் செல்வந்த நாடாக இலங்கையை மாற்றியமைக்க முடியும் என்று நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்

இதுதொடர்பில் அமைச்சர் மங்கள மேலும் தெரிவித்தவை வருமாறு :-

முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டிருப்பதால் வெளிநாடுகளில் முதலீடு செய்தவர்கள் பணத்தை மீண்டும் அமெரிக்காவிற்கு எடுத்துச் சென்றுள்ளனர். இதனால், டொலரின் பெறுமதி பலமடைந்துள்ளது.

ரூபாவின் பெறுமானம் வீழ்ச்சி காண்பதை அரசு என்ற ரீதியில் மிகவும் வெற்றிகரமாக முகம்கொடுத்து வருகிறோம். ரூபாவின் பெறுமானம் குறைவதைத் தவிர்ப்பதற்காக அந்நிய செலாவணியைப் பயன்படுத்தியிருக்கலாம், என்றாலும் அதனைச் செய்யவில்லை –

ரூபாவின் பெறுமானம் 2012ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சராக இருந்த காலத்திலேயே கூடுதலாக வீழ்ச்சி கண்டிருந்தது. அன்று ரூபாவின் பெறுமானம் 14 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டது.

இந்த வருடம் அமெரிக்கப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்படுகின்றது. இந்த நிலைமை காரணமாக உலக நாடுகள் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. தற்போது 160 ரூபா 60 சதம் என்ற மட்டத்திற்கு பலமடைந்துள்ளது. இம்முறை ரூபாவின் பெறுமானம் ஒன்பது சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்தியாவில் 11 சதவீதத்தாலும் இந்தோனேசியாவில் 8. 9 சதவீதத்தாலும் கொரியாவில் 8 சதவீதத்தினாலும் நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது. ஆஸ்திரேலியா மற்றும் ரஷ்ய நாடுகளின் நாணயங்களும் வீழ்ச்சி கண்டுள்ளன. இலங்கையின் பொருளாதாரத்தை பலமாக முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதன் மூலம் 2025ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும் செல்வந்த நாடாக இலங்கையை மாற்றியமைக்க முடியும் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர நம்பிக்கை வெளியிட்டார். (க)

# முருங்கைக்காய் அமோக விளைச்சல்!



கிண்ணியாவில் இம்முறை முருங்கைக்காய் விளைச்சல் மிக அமோகம்.

இதனால் 150 ரூபா தொடக்கம் 180 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் தற்போது மொத்த வியாபாரிகளால் ஒரு கிலோ 20 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகிறது.

கிண்ணியா பிரதேசத்தில் காக்காமுனை, குறிஞ்சாக்கேணி, பெரியாற்றுமுனை, முனைச்சேனை, கச்சக்கொடுத்தீவு, பூவரசன்தீவு மற்றும் பெரிய கிண்ணியா ஆகிய இடங்களில் அதிகளவு முருங்கைக்காய் விளைச்சல் இடம்பெற்றுள்ளது.

# ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரம்!

தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் நேற்று முதல் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி வரை தேசிய டெங்கு தடுப்புப் பிரிவால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

'டெங்குகள் அற்ற நாடு' என்ற தொனிப் பொருளில் இந்த வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இலங்கை முழுவதும் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு இடம்பெறவுள்ளது என டெங்கு தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ஹசித்த திசேரா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 70 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. இந்நிலையில், தற்பொழுது நிலவும் பருவப் பெயர்ச்சி காலநிலை மற்றும் மழை காரணமாக அடுத்து வரும் மூன்று மாதங்களுக்குள் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய அபாயம் காணப்படுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பாடசாலை மற்றும் கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் இடங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# இ.போ.ச. பஸ்ஸின் சாரதி, நடத்துநர் திரியாயில் மீது தாக்குதல்!

திருகோணமலை, போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் சாரதி, நடத்துனரை தனியார் பஸ் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் தாக்கியுள்ளர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் தொடர்பாக நேற்று குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதவிசிறிபுர பகுதியில் இருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த இந்த அரச பஸ்ஸை திரியாய் பகுதியில் வைத்து தனியார் பஸ் நடத்துநரும் சாரதியும் வழி மறித்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் கைகலப்பாக மாறி தாக்குதல் இடம்பெற்றுள்ளதுடன், காயமடைந்த அரச பஸ் சாரதியும், நடத்துநரும் குச்சவெளி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பிரான்ஸின் ஊடாக சுவிஸ்க்குச் செல்ல முயற்சித்த இலங்கையர் மலேசிய விமான நிலையத்தில் கைது!

பிரான்ஸின் ஊடாக சுவிற்ஸர்லாந்து செல்ல முயற்சித்த இலங்கையர் ஒருவர் மலேசிய விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேசிய கடவுச்சீட்டை பயன்படுத்தி பிரான்ஸ் செல்ல முயற்சித்த இலங்கையர் சுவர்ணபூமி, விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இந்த இலங்கையர் அந்நாட்டு குடிவரவு குடியல்வு அதிகாரிகளினால் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸ் சென்றடையும் முயற்சியில் இந்த நபர் பயணத்தை மேற்கொண்டுள்ளார். பிரபு தர்மலிங்கம் என்ற 45 வயதான இலங்கையர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என விமான நிலைய குடிவரவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரபு, மலேசிய நபரின் கடவுச்சீட்டு புகைப்படத்தை பயன்படுத்தியுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகின்றது. எனினும், குடியேற்ற அதிகாரிகள் முக அடையாள நுட்பத்தைப் பயன் படுத்தும்போது, பல முரண்பாடுகளை கண்டுபிடித்துள்ளனர். அத்துடன் பிரபு தர்மலிங்கம் ஒரு மோசடியாளர் என அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மலேசியா – சிங்கப்பூர் வழியாக அவர் மலேசியாவுக்கு பயணம் செய்து, அங்குள்ள முகவரிடம் கடவுச்சீட்டு பெற்றுக் கொண்டேன் என்றும் பிரபு அதிகாரிகளிடம் குறிப்பிட்டுள்ளார்.

5 லட்சம் ரூபா பணம் இதற்காக தான் முகவருக்கு வழங்கினேன் என்றும் சுவிற்ஸர்லாந்து செல்வதற்காக பிரான்ஸில் விமான டிக்கட் பெற தான் திட்டமிட்டேன் என்றும் கூறியுள்ளார்.

புகலிடம் கோரி சுவிட்ஸர்லாந்தில் உறவினர்களுடன் தங்க அவர் முயற்சித்துள்ளார் என தெரியவந்துள்ளது.

# நீர் நிரம்பிய வாளிக்குள் விழுந்த பெண் குழந்தை பரிதாபமாக பலி!

## பம்பலப்பிட்டியில் சம்பவம்

நீர் நிரம்பிய வாளியொன்றுக்குள் தவறுதலாக விழுந்த குழந்தையொன்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு பம்பலப்பிட்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் 4 வயதுடைய பெண் பிள்ளையே பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இந்த குழந்தை நீர் நிரம்பிய வாளிக்குள் தவறுதலாக விழுந்ததும் உடனடியாக களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட போதிலும் அங்கு சிகிச்சை பயனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெலிகுல் ஓயா – 'உலக முடிவு' பகுதியின் மலைத் தொடருக்கிடையில் கேபிள் கார்!



சப்ரகமுவ மாகாணத்தில் பெலிகுல் ஓயா மற்றும் 'உலக முடிவு' காணப்படும் மலைத் தொடர் பகுதிகளுக்கு இடையில் கேபிள் கார் சேவை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் நிதியுதவியின் கீழ் இந்த திட்டத்தை முன்னெடுக்க உள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெலிகுல் ஓயா மற்றும் உலக முடிவு பகுதிகள் சுற்றுலா பயணிகளை அதிக கவர்ந்த இடமாகும். இந்நிலையில் இப்பகுதியில் கேபிள் கார் சேவை அமைக்க டுபாய் அரசுடன் பேச்சு நடத்தியுள்ளோம்.

இந்த திட்டத்துக்கான ஆலோசனைகளை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் புத்திஜீவிகளிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளோம்.

இதன் மூலம் இந்தப் பகுதியில் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை மேலும் அதிகரிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# மின் தடை

யாழ்ப்பாணம், செப். 27

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**மன்னார் பிரதேசத்தில் -**

மடுமாதா ஆலயப் பிரதேசம், மடுமாதா ஆலயம் ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் ஒக்.5 இல்!

தரம் ஐந்து புலமைப் பரீட்சை முடிவுகள், ஒக்டோபர் 5 ஆம் திகதி வெளியிடப்படுமென இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, கடந்த ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தப் பரீட்சையில், 3 லட்சத்து 55 ஆயிரத்து 326 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

நாடு தழுவிய ரீதியில், 30 ஆயிரத்து 50 பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# தினசரி ராசி பலன் (27.09.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 11 ஆம் நாள். வியாழக்கிழமை. துவிதீயைத்திதி காலை 9.03 மணி வரை பின்னர் திரிதீயை. நட்சத்திரம்: அசுவினி பி.இ.2.22 மணி வரை பின்னர் பரணி. அமிர்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 1.31 மணி முதல் 3.01 மணி வரை.

**சுபநேரம்** - காலை 7.32 மணி முதல் 9.02 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - புரட்டாதி மாத தேய்பிறை திரிதீயை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - அசுவினி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**



**மேஷம்** சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் அளவற்ற மகிழ்ச்சியால் சுபீட்சம் உண்டாகும். பண்பானவர்களின் நட்பால் அதிக நன்மை அடைவார்கள். வீட்டில் சுபகாரியம் நடக்கும்.



**ரிஷபம்** சஞ்சலமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். கடுமையான சொற்களால் வசை பாடுபவர்களிடம் இருந்து ஒதுங்கியிருப்பது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.



**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பணம் புழக்கம் சரளமாக இருக்கும். உயர்ந்த மனிதர்களின் நட்பு கிடைக்கும். எதிர்பாராத வகையில் உத்தியோக மேன்மை உண்டாகும். தொழில் போட்டியில் வெற்றி காண்பார்கள்.



**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் தங்கள் பணியில் பொறுப்புடனும் கவனமுடனும் பணியாற்ற வேண்டும். பணம் விடயங்களில் எச்சரிக்கை தேவை.



**சிம்மம்** நன்மையான நாள். பணம் புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தனியார் நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கும்.



**கன்னி** குழப்பமாபன நாள். பணவரவு குறையும். மனதில் ஒரு வித கவலை உண்டாகும். குடும்பப் பிரச்சினைகளால் நிம்மதி குறையும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது சிரமம்.



**துலாம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் ஏற்ற இறக்கம் இருந்தாலும் ஒருவாறு சமாளித்துக் கொள்வார்கள். உத்தியோகத்தர்கள் தங்கள் பொறுப்புகளில் கவனம் செலுத்த வேண்டும்.



**விருச்சிகம்** கீர்த்தியான நாள். வருமானம் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளப் போதுமானதாக இருக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். பெண்கள் சுயதொழிலில் முன்னேற்றம் அடைவார்கள்.



**தனுசு** நன்மையான நாள். பணம் புழக்கம் திருப்தியைத் தரும். இல்லத்தில் சுப காரியங்கள் நடக்கும். தொலை தூரப் பணயம் சென்று வருபவர்கள் காரியத் தடைகள் நீங்கும். முயற்சிக்கு உற்ற நண்பர்களின் உதவி கிடைக்கும்.



**மகரம்** சலனம் மிகுந்த நாள். வருமானம் குறையும். குடும்ப நிலையில் அமைதி இன்மை காணப்படும். பிள்ளைகளால் செலுகள் அதிகரிக்கும். தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும்.



**கும்பம்** சமபலகன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவு உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதம் ஏற்படும். யாருக்கும் பணம் கொடுப்பதோ வாங்குவதோ கூடாது. பயணத்தின் போது கவனம் தேவை.



**மீனம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் சந்தோசம் நிறைவாக இருக்கும். நண்பர்கள் உதவியால் வியாபாரத்தில் முன்னேற்றமடைவார்கள். உத்தியோக உயர்வு கிடைக்கும்.

**சந்திராஷ்டம நாள்: உத்தரம் 1 ஆம், 2 ஆம் , 3 ஆம், 4 ஆம் பாதங்கள் அத்தம், சித்திரை 1ஆம், 2 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# வவுனியா நகரசபையால் நகரிலிருந்து அகற்றப்படுகிறது 600 தொன் குப்பை!

வவுனியா நகரசபையினரால் நகரத்திலிருந்து ஒரு மாதத்திற்கு 600தொன் குப்பைகள் அகற்றப்பட்டு வருகின்றன என்று தகவல் அறியும் சட்டத்தினூடாக கேட்கப்பட்ட தகவலுக்கு நகரசபையால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

நகரத்திலிருந்து அகற்றப்பட்டு வரும் குப்பைகள் நகரிலிருந்து 10கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள பம்பைமடு பகுதியில் குப்பை மீள் சுழற்சி செய்யப்படுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றன. எனினும் அங்கு மீள் சுழற்சி செய்யப்படவில்லை.

வவுனியா நகரிலிருந்து ஒரு நாளைக்கு 18 தொடக்கம் 20 தொன் வரையான குப்பைகள் உழவு இயந்திரம் கனரக வாகனங்களில் அகற்றப்பட்டு வருகின்றன.

எனினும் அகற்றப்படும் குப்பைகள் தரம் பிரிக்கப்படுவதில்லை அதேபோன்று ஒதுக் கப் பட்ட பகுதியில் ஒழுங்கு முறை பின்பற்றப்படவில்லை.

சாரதிகள் விரும்பிய இடங்களிலேயே குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதனைச் சென்று பார்வையிடுவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை.

சுகாதாரப்பரிசோதகர் இப்பகுதிக்குச் சென்று தனது கடமைகளைச் சரிவர மேற்கொள்வதில்லை. அதற்கான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படுவதில்லை. இங்கு பாதுகாப்புக் கடமையிலுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர் தொடர்ந்து கடமையாற்றுவதில்லை. அங்கு கொட்டப்படும் குப்பைகள் எரிக்கப்படுவதால் சுவாசப்பிரச்சினைகள் ஏற்படுகின்றன என அயலவர்கள் தெரிவிக்கின்றனர். இக்குப்பைகள் இரும்புகள் எடுக்க வருபவர்களினால் எரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்தஜூன்மாதம்முதலாம் திகதியிலிருந்து ஜூலை மாதம் முதலாம் திகதிவரையான ஒரு மாத காலப்பகுதியில் நகரசபையினால் 600 தொன் குப்பைகள் நகரிலிருந்து அகற்றப்பட்டு பம்பைமடுவில் கொட்டப்பட்டுள்ளன. இக்குப்பைகள் அனைத்தும் மீள் சூழற்சி மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு மீள் சூழற்சி மேற்கொள்ளாமல் கொட்டப்படுகின்றமையால் நகரசபையினருக்கு கிடைக்கும் வருமானம் இன்றிச் செல்கின்றது. இக்குப்பைகள் மீள் சுழற்சி மேற்கொள்வதால் பலருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கவும் வழிகள் ஏற்படுவதுடன் நகரசபைக்கு வருமானமும் அதிகரிக்க வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

(கு)

# சமையல் எரிவாயு விநியோகத்தை முடக்கத் தீர்மானம்!

சமையல் எரிவாயு விநியோகஸ்தர்கள் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத்தீர்மானித்துள்ளனர்.

இந்த நிலையில், விநியோகத்திற்கான செலவு வீதங்கள் அதிகரித்துள்ளன. அதற்கேற்ற நிவாரணங்களை பெற்றுக்கொடுக்குமாறு அரசு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் சாதகமான பதில் இல்லை.

இந்த நிலை தொடருமானால் நாடளாவிய ரீதியில் சமையல் எரிவாயு விநியோகம் முடக்கப்படும் என அச் சங்கம் எச்சரித்துள்ளது.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அச் சங்கத்தின் தலைவர் சக்தியேந்திர விஜேபுர உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## கீத் நொயர் கடத்தல் வழக்கு:

# விசாரணைகளை முடிக்குமாறு நீதிமன்றம் காலக்கெடு!

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் விசாரணைகளை விரைவாக முடிக்குமாறு கல்கிஸை மேலதிக நீதிவான் லோசன அபேவிக்ரம குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, அடுத்த இரண்டு தவணைகளுக்குள் விசாரணை களை முடித்து, அது தொடர்பான ஆவணங்களை சட்டமா அதிபருக்கு அனுப்ப வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் விசாரணையின் போது, குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கேள்விகளுக்கு இலங்கையின் தற்போதைய பாதுகாப்புச் செயலர் பதில்களை அளித்துள்ளார் என்றும், எனினும், படுவத்த மறைவிடம் பற்றிய எந்த ஆவணமும் அதில் இல்லை என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர். இந்த வழக்குடன் தொடர்புடைய சில ஆவணங்கள் இன்னமும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

இதையடுத்து, வழக்கை விரைவாக முடித்து, ஆவணங்களை சட்டமா அதிபருக்கு அனுப்புமாறு உத்தரவிட்ட நீதிவான், டிசெம்பர் 11ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அறிவித்தார்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட மேஜர் புலத்வத்த, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர மற்றும் ஏனைய ஆறு சந்தேக நபர்களும் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

# வடக்கில் 215 தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்கள்!

வடமாகாணத்தில் இதுவரை தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்களாக 215 விடயங்கள் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் மொஹன்லால் கிரேறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் 176 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் 88 இடங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 64 இடங்கள் உண்டு. இவற்றில் 33 இடங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் 50 இடங்களும் யாழ் மாவட்டத்தில் 79 இடங்களும் கிளிநொச்சியில் 18 இடங்களும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளன.

வர்த்தமானியில் வெளியிடப்படாத இடங்களை விரைவில் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ராஜாங்க அமைச்சர் மொஹன் லால் கிரேறு மேலும் தெரிவித்தார்.

# கைதிகள் விடுதலைக்காக கொழும்பில் போராட்டம்

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 27

உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத் திக் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ள வுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் அரசியல் கைதிகளை நேற்று மாலை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த 13 நாட்களாக அநுராதபுரம் சிறையிலே அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றார்கள். தமக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும் அல்லது விடுதலை செய்யப்படவேண்டும் என்பது அவர்களின் கோரிக்கைகளாக இருக்கிறது.

உரிய தீர்வுகள் கிடைக்கும் வரைக்கும் தமது போராட்டத்தைக் கைவிடாமல் தொடர்வதற்கான முயற்சியை மேற்கொண் டிருக்கிறார்கள். இன்னும் காலம் தாழ்த்தப்பட்டால் தாம் எடுத்துக்கொள்ளும் மருந்துகள் அனைத்தையும் நிறுத்தப்போவதாக தெரி வித்துள்ளார்கள்.



எனவே அவர்கள் வெகுவிரைவில் விடுதலை செய் யப்படவேண்டும். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளும ன்ற உறுப்பினர்கள், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பிரதேசசபை, நகரசபை உறுப்பினர்கள் அனை வரும் இணைந்து கொழும்பிலே ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு முயற்சி செய்துவருகின்றோம்.

அதனை வெகுவிரைவில் நடத்துவதற்கு தீர்மா னித்துள்ளோம். அரசியல் கைதிகளின் போராட்டம் நியா யமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்களின் விடுதலைக்காக தொடர்ந்தும் உழைக்கும் என்பதை இங்கு உறுதியுடன் தெரிவிக்கின்றேன்–என்றார்.(ஐ)

# வாழ்க்கைச்சுமை அதிகரிப்பால் மக்கள் பெரும் திண்டாட்டம்!

## மரக்கறி விலையும் உயரும் அறிகுறி

ஒக்ரோபர் மாதத்தின் நடுப்பகுதி தொடக்கம் மரக்கறி வகைகளின் விலை மீண்டும் அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது , அதிகளவில் மரக்கறி வகைகள் சந்தையில் கிடைப்பதால் , எதிர்வரும் மாதத் தில் மரக்கறி தட்டுப்பாடு ஏற்படக்கூடும். எனவே தான் மரக்கறி வகைகளின் விலை மீண்டும் அதிகரிக்கும் எனவும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

# கொழும்பில் 11 பேர் கடத்தல் சம்பவம்; கரன்னகொட பொறுப்பு கூறவேண்டும்

## கடற்படை அதிகாரி வாக்குமூலம்

கொழும்பு நகரப் பகுதியில், 11 மாணவர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் கடற்படைத் தளபதி அட் மிரல் வசந்த கரன்னகொட மற்றும் சுமித் ரணசிங்க ஆகிய இருவரும் பொறுப்புக் கூறவேண்டுமென, ஓய்வுப் பெற்ற ரியர் அட்மிரல் சியாமல் பெர்னாண்டோ வாக்கு மூலம் வழங்கியுள்ளார். குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்றப் பதில் நீதிவான் ஜீவனி பத்தேகலவிடம் இதனைத் தெரிவித்துள்ளனர்.

வசந்த கரன்னாகொடவின் கீழ் சேவையாற்றிய அவரது செயலாளரே இந்தச் சம்பவத்தின் சாட்சியாளர் என்றும் ரியர் அட்மிரல் சியாமல் பெர்னான்டோ தெரிவித்தார் எனக் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(ஐ)

# மஹிந்தவின் அழைப்பை அடுத்து அவசரமாக நாடு திரும்பினார் பஸில்!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார். முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவின் அவசர அழைப்பின் பேரி லேயே அவர் இலங்கை வந்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

அமெரிக்காவில் இரண்டு மாத கால விடுமுறையை கழித்ததன் பின்னர் எதிர்வரும் 10 ஆம் திகதி இலங்கை வருவதற்காக பஸில் ராஜபக்ஷ பயணச்சீட்டை ஏற்பாடு செய்திருந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுவதற்காக வும் மருத்துவ தேவைகளுக்காகவும் பஸில் ராஜபக்ஷ வெளிநாடு சென்றிருந்தார்.

இதேவேளை, அரசியல் களம் சூடுபிடித்திருப்பதன் காரணமாக கூட்டு எதிர்க்கட்சியின் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன அமைப்பின் நடவடிக்கைகளை அதி கப்படுத்துவதற்கான தேவைகள் ஏற்பட்டிருக்கின்றமை யால் தாமதிக்காமல் உடனடியாக நாட்டுக்கு வருமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பஸில் ராஜ பக்ஷவுக்கு தெரிவித்துள்ளார் என அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இணையத்தை கலக்கும் இலங்கை இளைஞனின் முப்பரிமாண ஓவியம்!



இலங்கை இளைஞனின் மற்றுமொரு முப் பரிமாண ஓவியம் (3D) புகைப் படங்கள் இணை யத்தில் பிரபல்யம் அடைந்துள்ளன.

போதிய வசதிகள் இல்லாத போதும் தனது திறமையை வெளிப்படுத்தும், ஓவியரும், புகைப் பட கலைஞருமான துஷார சம்பத் 3D புகைப் படங்களை வரைந்துள்ளார்.

துஷாரவினால் வரையப்படும் 3D புகைப் படங்கள் இலங்கையர்களால் மட்டுமன்றி சர்வ தேசத்தையும் தன்பக்கம் திரும்ப வைத்துள்ளன.

3D படங்களை வரைவதற்கு போதுமான வச திகள் இல்லாத நிலையிலும், தனக்கு கிடைத்த வற்றை கொண்டு படம் வரையும் நடவடிக்கை யில் துஷார ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் 3D முறையில் அவர் வரைந்த படம் பார்ப்பதற்கு உண்மையான காட்சி போன்றே காணப்படுகின்றது.

துஷாவினால் ஏற்கனவே வரையப்பட்ட 3D புகைப்படங்கள் மிகவும் பிரபல்யம் அடைந்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹிருணிக்கா எம்.பி. வீட்டில் நகை திருட்டு

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேம சந்திரவின் வீட்டிற்குள் திருடர்கள் புகுந்து பெறுமதி யான தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ள னர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரலங்கல வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் 5 லட் சம் ரூபாவுக்கு அதிக பெறுமதியான தங்க நகைகள் மற்றும் கைக்கடிகாரங்கள் போன்றவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

24 மணித்தியால பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ள நிலையில், கடந்த திங்கட்கிழமை திருடர் கள் புகுந்து திருடியுள்ளனர். இது குறித்து ஹிருணிக் காவின் கணவர் நேற்று முன்தினம் அத்துருகிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று இரவு வீட்டின் மதில் மீது நடந்து வந்த திருடர், வீட்டின் மேல் மாடி யில் உள்ள ஜன்னல் ஊடாக வீட்டிற்குள் நுழைந்துள் ளனர் என தெரியவந்துள்ளது.

ஜன்னல் வழியாக அறை ஒன்றுக்குள் நுழைந்து அங்கிருந்த அலுமாரியின் கதவினை திறந்து நகை மற்றும் பொருள் திருடப்பட்டன. நகைகள் வைக்கப் பட்டிருந்த பெட்டிகள் மாத்திரம் வீட்டிற்கு அருகில் இருந்த காணி ஒன்றில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று ஹிரு ணிக்கா மற்றும் கணவர் வீட்டில் இருந்துள்ளனர். நேற்று முன்தினம் காலை எழுந்து பார்க்கும் போது பொருள்கள் காணாமல் போயுள்ள விடயம் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் இதுவரை சந்தேக நபர்கள் கைது செய்யப்படாத நிலையில் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மோ. சைக்கிளின் பின் இருக்கையில் இருந்தவரை தும்பிக்கையினால் தூக்கி நிலத்தில் அடித்த யானை!

மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் சென்ற நபரை தும்பிக்கையினால் தூக்கி நிலத்தில் அடித்த சம்பவமொன்று பதி வாகியுள்ளது.

பொலன்னறுவை, அரலகங்கவில கல்எளிய பிரதேசத்தில் இந்தச் சம்ப வம் அண்மையில் இடம் பெற்றுள்ளது. யானைத் தாக்கியதில் இந்த நபர் படுகாயமடைந்துள்ளார்.

வீதியில் நின்றிருந்த யானை மோட்டார் சைக் கிளில் சென்ற நபரை தும் பிக்கையினால் தூக்கி நிலத்தில் எறிந்து அவரது தலையில் மிதித்துள்ளது. கல்எளிய ருஹுணுகம என் னும் இடத்தைச் சேர்ந்த ரத்னபால என்ற 65 வய தான நபரே சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார். காயமடைந்த நபர் தெஹி யத்தகண்டிய வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

காட்டு யானைகள் தொல்லை குறித்து அதி காரிகள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர் எனமக்கள் விசனம் வெளி யிட்டுள்ளனர்.

# ரூபாவின் பெறுமதி 26 சதத்தால் பலமடைந்துள்ளது: மத்திய வங்கி!

இலங்கை ரூபா ஒன்றின் பெறுமதி டொலரின் விலையுடன் ஒப்பிடும் போது நேற்று முன்தினம் சொற்ப அளவு பலமடைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை நேற்றுமுன்தினம் 170.39 ரூபாவாக குறைவடைந் துள்ளது. இதனால் நேற்று முன்தினம் ரூபாவின் பெறுமதி 0. 26 சதத்தால் பலமடைந்தது என மத் திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை கடந்த 21 ஆம் திகதி 170.65 ரூபாவாக அதிகரித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மசகு எண்ணெய் விலை உலக சந்தையில் அதிகரிப்பு!

உலகசந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிரடியாக உயர்ந்துள் ளது என உலக பொருளா தார தகவல்கள் தெரிவித் துள்ளன.

இதன்படி, ஒரு பீப்பா மசகு எண்ணெய் 81.20 டொலர்களாக அதிகரித் துள்ளது. டபிள்யு. ரி.ஐ. ரக ஒரு பீப்பா மசகு எண் ணெய் 72.08 டொலர் களாகவும் உயர்ந்துள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதத் தின் பின்னர் முதல் தடவை யாக மசகு எண்ணெய் இவ்வாறு அதிகரித்துள் ளதாக சுட்டிக்காட்டப்படு கின்றது.

இலங்கையில் அறி முகம் செய்துள்ள புதிய சூத்திரத்தின்படி எதிர்வரும் 10 ஆம் திகதி எரிபொருள் விலை அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன என ஏற்கனவே பொருளி யல் ஆய்வாளர்கள் தெரி வித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

**உலக சுற்றாடல் தினம் செப். 27 இன்றாகும்**




# சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு உலக நாடுகள் கரிசனை

இன்றுசெப்ரெம்பர்27உலக சுற்றுலா தினமாக கொண்டப்படுகிறது. சுற்றுலா செல்ல விரும்பாத மனிதர்கள் யாரும் உலகில் இருக்க முடியாது. சுற்றுலா மனிதனுக்கு பல்வேறு உலகங்களை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக, பல்வேறு கலாசாரங்களை கற்றுக் கொள்ள வழிவகுக்கிறது. பல்வேறு இடங்களை காண்பதால் மனிதன் மனதில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. ஓர் இடத்தில் வசிப்பவர்கள், புதிய இடங்களை காண செல்வது என்றால் மகிழ்ச்சி தானே. மலைகள், நீர் வீழ்ச்சி, தீவுகள்,



உலக அதிசயங்கள், கட்டடங்கள், கேளிக்கை பூங்காக்கள், கடற்கரை என உலகில் பல்வேறு வகையான சுற்றுலா இடங்கள் உள்ளன.

கல்விச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, வியாபார சுற்றுலா, சுற்றுச் சூழல் சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, கலாசார சுற்றுலா என பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு பெருமை,



அடையாளம், தனித்தன்மை உள்ளது. சுற்றுலா மூலம் மனித குலத்தை மேம்படுத்தும் வகையில், செப்ரெம்பர்27ஆம் திகதியை உலக சுற்றுலா தினமாக 1970ஆம் ஆண்டில் ஐ.நா. சபை அங்கீகரித்து அறிவித்தது. அன்று முதல் சுற்றுலா தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. துருக்கியில் நடந்த 12வது மாநாட்டிலும், சீனாவின் பீஜிங்கில் நடந்த 15வது மாநாட்டிலும் இந்த தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டு உலக சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில் பழங்காலம் முதலே தீர்த்த யாத்திரை என்ற பெயரில் புனித யாத்திரைகள் செல்வது இருந்துள்ளது. இமயம் தொடங்கி குமரி வரை கடல், மலை, நதி, கோயில் போன்றவற்றை பார்ப்பதற்காக கோடிக்கணக்கான மக்கள் இந்தியா முழுவதும் சுற்றி வந்துள்ளனர். உலகம் முழுவதும் இன்றைக்கு சுற்றுலா தொழிலில் மட்டும் 2 கோடியே 31 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். சுற்றுலா மூலமாகவே பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு தொழில்கள் வளர்ந்துவந்துள்ளன. பல நாடுகளில்



உணவு தொழில் செழித்து வளர சுற்றுலா துறையும் ஒரு காரணம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு ஆண்டை சுற்றுலா ஆண்டாக அறிவித்து சுற்றுலாவை மேம்படுத்தி வருகின்றன. சுற்றுலாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கிலும், சுற்றுலா எப்படி அரசியல், சமூக, பொருளாதாரத்தில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை விவரிக்கும் விதத்திலும் செப்., 27 ஆம் திகதி உலக சுற்றுலா தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இனி உலகின் தலை சிறந்த 10 சுற்றுலா நகரங்களை இங்கு காண்போம்.

பாங்கொக் (தாய்லாந்து) : துறைமுக நகரான இந்த நகரம் வரலாற்று சிறப்பையும், நவீன உலகையும் ஒருங்கே கொண்டுள்ளது. இங்கு உள்ள ஆடம்பர மாளிகை மற்றும் தண்ணீரில் மிதக்கும் சந்தையும், பழங்கால மாளிகை, கோயில் என அனைத்தும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

லண்டன் (இங்கிலாந்து): தேம் நதியின் அழகு லண்டன் நகருக்கு மிகப்பெரிய வர்ப்பிரசாதம். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முந்தைய அழகை அப்படியே வைத்துள்ளது. வளர்ந்த நாடுகளுக்கான அனைத்து அழகையும் ஒருங்கே வைத்துள்ளது.



பாரிஸ் (பிரான்ஸ்) : இந்த நகரம் கி.மு 3ஆம் நூற்றாண்டில் வடிவமைக்கப்பட்டது. இதை முந்தைய செல்டிக் இன மக்கள் பாரிசி என

**உலகம் முழுவதும் சுற்றுலாத் தொழிலில் சுமார் இரண்டரைக் கோடி பேர் ஈடுபாடு**

அழைத்து வந்தனர். இவர்கள் உருவாக்கிய இந்த அற்புத நகரம் மேற்கிந்தியா நாடுகளில் மிகவும் பெரியது. இங்கு மிகவும் பழமையான நோட்ரே கதீட்ரல் தேவாலயம், புனித செப்பல் தேவாலயம் மற்றும் ஈபிள் டவர் மிகவும் பிரசித்தம் பெற்றவை. இங்குள்ள செய்னி ஆறு யுனஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்டது.

துபாய் (ஐக்கிய அரபு) : ஏழு அரபு



நாடுகளின் தலைநகராக விளங்கும் துபாய் சுற்றுலாவை மேம்படுத்தும் விதமாக பல ஏற்பாடுகளை செய்து வருகிறது. அதன்படி, இங்கு சிறந்த கடைத் தெருக்கள் மற்றும் வர்த்தகத்தை ஈர்க்கும் விதமாகவும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

நியூயோர்க் (அமெரிக்கா): புல்வெளிகள், காடுகள், ஆறுகள், பண்ணைகள், மலைகள், ஏரிகள் மற்றும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட நகரம் அமெரிக்காவின் நியூயோர்க். இதுபோன்ற பெருநகரம் எங்கும் இல்லை எனலாம்.

சிங்கப்பூர் : சிங்க நகரம், பூங்கா நகரம் என செல்லமாக அழைக்கப்படும் சிங்கப்பூர், உலகின் முக்கிய வர்த்தக நகரமாகும்.

கோலாலம்பூர் (மலேசியா) : கலாசாரம், நிதி மற்றும் பொருளாதாரம், வர்த்தக மையமாக திகழும் நகரம் என்பதால் இதை ஆல்பா வோர்ல்ட் சிட்டி என செல்லமாக அழைக்கப்படுகிறது. உலகின் முதல் உயர்ந்த கட்டம் பெட்ரோனஸ் இரட்டை கோபுரம் மலேசியாவின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது.

இஸ்தான்புல் (துருக்கி) : ஆசியா மற்றும் ஐரோப்பாவுக்கு நடுவே உள்ள நாடு துருக்கி, இந்நாடு மர்மர மற்றும் கருங் கடல் ஆகியவற்றால் சூழப்பட்ட வரலாற்றை பறைசாற்றும் இடமாக அமைந்துள்ளது. இந்த நகரை யுனெஸ்கோ உலக பாரம்பரிய நகரமாக அறிவித்துள்ளது.

டோக்கியோ (ஜப்பான்) : ஜப்பான் அரசாங்கத்தால் அருமையாக பராமரிக்கப்பட்டு வரும் அழகிய சுற்றுலா நகரமாகும். இங்குள்ள ஹோன்ஸு, இஜ், ஒகசாவரா ஆகிய தீவுகள் சுற்றுலாவுக்கு என சிறப்பு பெற்றவை.

சியோல் (தென் கொரியா): இங்குள்ள ஹான் நதி 2000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே வரலாற்றுச் சிறப்பு பெற்றது. இந்த நகரில் உள்ள ஜேங்டியோக் அரண்மனை, Hwaseong கோட்டை, Jongmyo கோவில், Namhansanseong மற்றும் Joseon வம்சத்தின் அரச கல்லறைகள் ஆகிய ஐந்து இடங்கள் யுனெஸ்கோவால் பாரம்பரிய பகுதிகள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளன. *

**மத்திய அரசின் சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சு மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு என்பவற்றின் அனுசரணையுடன் வடக்கு மாகாண முதலமைச்சரின் வழிகாட்டலின் கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையும், வடக்கு மாகாண சுற்றுலா பணியகமும் மற்றும் யாழ் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் உலக சுற்றுலாத் தினம் - 2018 நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். மாநகர சபை மைதானத்தில் ஆரம்பமாகின. அங்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் உரையாற்றினார். அவரின் உரை இங்கு பிரசுரமாகியுள்ளது.**



# வடக்கு மாகாணத்திலும் சுற்றுலாச் சாத்தியங்கள்

## எம் சுற்றுலா பணியகமும் அபிவிருத்தி பணிகளில் மிகவும் மும்முரம், ஆர்வம்!

உலக சுற்றுலாத் தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு இன்றைய தினம் நடைபெறவிருக்கின்ற சுற்றுலாக் கண்காட்சிகள், கலை கலாசார நிகழ்வுகள் உணவுத் திருவிழா ஆகிய நிகழ்வுகளை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன். இன்றைய இந்த நிகழ்வு காலை 9 மணிக்கு ஆரம்பமாவதாக இருந்தது. ஆனால் தியாகி திலீபன் 31 வருடங்களுக்கு முன் இந் நாளில் உயிர் நீத்த காலை நேரம் 10.48 ஐ நினைவு கூர்ந்து இக் கூட்டம் முற்பகல்11 மணிக்குத் தொடங்கியது. ஜனநாயக முறையில் அகிம்ஷை வழியில் போராடி உயிர் நீத்த ஒருவரின் வாழ்க்கை இன்றைய ஜனநாயக, அகிம்சை வழி அரசியல் போராட்டங்களுக்குஒருமுன்னோடியாகஅமைந்திருந்தது. ஆகவே தான் அவர் நினைவுக்கு மதிப்பளித்து இக் கூட்டத்தைச் சற்று தாமதித்துத் தொடங்குகின்றோம்.

மத்திய அரசின் சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சின் அனுசரணையுடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையும், வட மாகாண சுற்றுலாப் பணியகமும் இணைந்து இவ் ஆண்டுக்கான உலக சுற்றுலாத் தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளன.

இலங்கைக்கு மிகக்கூடிய வருவாயைத் தேடித் தருகின்ற சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி பணிகள் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி அடைந்துள்ள நிலையிலும் வட பகுதிக்கான சுற்றுலா அபிவிருத்திசெயற்பாடுகள்அவ்வாறான வளர்ச்சியை இதுவரை காணவில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக சிறு சிறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன வேயன்றி எமது சுற்றுலாத்துறையின் வளர்ச்சி பூச்சிய நிலையிலேயே தொடர்ந்து இருந்து வருகின்றது. வட பகுதியின் சுற்றுலா அபிவிருத்தி வளர்ச்சியடையாமைக்கு இப் பகுதியில் இடம்பெற்ற நீண்டகால யுத்தம் ஒரு காரணமாக காட்டப்பட்டுள்ள போதும் யுத்தம் நிறைவுக்கு வந்து 9 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியானது மிகவும் மந்தமான கதியில் நகர்வது வருத்தத்திற்குரியது.

நீண்டகால யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மேம்பாடு, போக்குவரத் துக்கான தெருப் பாதைகளின் புனரமைப்பு, ரயில் சேவையின் மீள் அறிமுகம் ஆகிய செயற்பாடுகளின் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகை சற்று அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. இந் நிலையில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில்அனுபவங்களைப்பெற்றுள்ள முதலீட்டாளர்களை இப் பகுதிக்கு வரவழைத்து சுற்றுலாத் துறையில் முதலீடுகளை மேற்கொண்டு இத் துறையை வளர்ச்சியடையச் செய்வதற்காக வட மாகாண சபையின் முதலமைச்சரின் அமைச்சின் கீழ் சுற்றுலாத் துறைக்கென தனியான ஒரு பிரிவு உருவாக்கப்பட்டு பேராசிரியர் தேவராஜா அவர்களின் வழிகாட்டலின் கீழ் வடமாகாணத்திற்கான சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்திற்கென 2017 - 2020 காலப்பகுதிக்கான ஒரு தந்திரோபாயத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து சுற்றுலாப்பணியகம் என்ற ஓர் அமைப்பு தனியாக உருவாக்கப்பட்டு சுற்றுலாத் துறையின் அபிவிருத்திகளை முன்னெடுத்து செல்வதற்கான பொறுப்புகளையும், நடவடிக்கைகளையும் அதனிடம் கையளித்துள்ளோம்.



வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் இங்கு மிகக் கூடிய அளவிலான சுற்றுலாமையங்களும்புராதனசின்னங்களும் வரலாற்றுப் பதிவுகளும் மற்றும் இன்னோரன்ன பாரம்பரிய கலை கலாசார விழுமியங்களும் காணப்படுகின்றன. அவற்றை முறையாக வரிசைப் படுத்தி எமது புராதன சின்னங்களின் வரலாற்றுப் பதிவுகளை சுற்றுலாப் பயணிகள் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் காட்சிப்படுத்த வேண்டும்.

சரித்திரம் சில இடங்களில் பிறழ்வாக எடுத்துரைத்து வரப்படும் இக்கால கட்டத்தில் எமது பாரம்பரியத்தின் உண்மை நிலை உலகிற்கு எடுத்துக் காட்டப்படுவது அத்தியாவசியமாகின்றது. மேலும் வடபகுதியை சுற்றிவரவுள்ள மணற்பாங்கான கடற்கரைகள் சிறந்த சுற்றுலாத்தலங்களாக மாற்றப்படலாம். வட பகுதியில்உள்ளசப்ததீவுக்கூட்டங்களில் நெடுந்தீவு ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றப்படலாம். மதரீதியான சுற்றுலா, வைத்திய சிகிச்சை சார்பான சுற்றுலா, சூழல் சார்ந்த சுற்றுலா, கலாசாரச் சுற்றுலா, இயற்கைக் காட்சிச் சுற்றுலா என்று பலவிதமான சுற்றுலாச் சாத்தியங்கள்வடமாகாணத்தில்அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவை பற்றியெல்லாம் எமது சுற்றுலாப் பணியகம் கருத்தில் எடுத்து அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.



வடபகுதிக்கான இந்தச் சுற்றுலாப் பணியகத்தின் செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டு துரிதமான அபிவிருத்திப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையை நான் அவதானித்துள்ளேன். இன்று நடைபெறுகின்ற இந்தக் கண்காட்சி நிகழ்வுகள் மற்றும் உலக சுற்றுலா தின கொண்டாட்ட நிகழ்வுகள் தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்வதிலும் அவற்றை நடைமுறைப் படுத்துவதிலும்எமது அமைச்சின்செயலாளருடன் சேர்ந்து இந்தச் சுற்றுலா பணியகமும் அதன் இதர உத்தியோகத்தர்களும் அக்கறையும் ஊக்கமும் காட்டி வருகின்றனர். அவர்களுக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகுக!

இன்று திறந்து வைக்கப்படுகின்ற இந்த சுற்றுலாக் கண்காட்சியில் எமது பிரதேசத்தின் கைத்தொழில் உற்பத்திகள், எமது பாரம்பரிய உணவு உற்பத்திகள் ஆகியன காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. எமது பிரதேச கலாசார நிகழ்வுகளும் இங்கே இடம்பெற இருக்கின்றன.

எமது பாரம்பரிய உணவுப் பொருள்களும், எமது உணவக விடுதிகளால் வழங்கப்படுகின்ற நவீன உணவுப் பொருள்களும் இங்கே பெருமளவில் விற்பனை செய்வதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீங்கள் உணவுத் திருவிழாவில் பங்குபற்றியவாறே இங்கு நடைபெற இருக்கின்ற கலை நிகழ்ச்சிகளையும் கண்டு களிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று அறிகின்றேன்.




இந்த உலக சுற்றுலாத் தினக் கொண்டாட்டங்கள் மூன்று நாள்களுக்கு நடைபெற உள்ள நிலையில் நாளைய தினம் (இன்று வியாழன்) யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற இருக்கின்ற 2018ஆம் ஆண்டுக்கான உலக சுற்றுலாத்தின நிகழ்வில் கலந்து கொண்டு வடமாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பாகவும் இப் பகுதிகளில் காணப் படும் சுற்றுலா மையங்கள் மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவதற்கான அனுகூல காரணிகள் ஆகியன பற்றி எல்லாம் ஆராயலாம் எனத் தெரிவித்து எனது இந்த ஆரம்ப அங்குரார்ப்பண உரையை இந்தளவில் நிறைவு செய்கின்றேன்.

# உலகிலேயே மிக கொடூரமான கடல் பாம்பு

கடித்த உடனே நரம்பு மண்டலத்தைப் பாதித்து மரணத்தை விரைவுபடுத்தும் விஷ ஜந்துக்கள் உலகத்தில் பரவலாகக் காணப்படுகின்றமை தெரிந்ததே.

உலகத்தில் கொடிய விஷத்தை அதிகமாகக் கொண்ட பாம்பினங்கள் அனைத்து நாடுகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன.

உலகிலேயே மிகக் கொடூரமான நஞ்சைக் கொண்ட பாம்பாக கருப்பு மாம்பா விளங்குகின்றது. இது ஆபிரிக்காவை வாழிடமாகக் கொண்ட ஒரு நச்சுப்பாம்பு இனம் ஆகும்.

இதுதான் உலகிலேயே மிக விரைந்து ஊர்ந்து செல்லவல்ல பாம்பினம்.

மணிக்கு 20 கி.மீ (12.5 மைல்கள்) விரைவில் சிறு தொலைவு ஊரவல்லது. ஒரே கடியில் 100 மில்லி கிராம் நஞ்சை உட்செலுத்தும் என்றும் சுமார் 10 மில்லி கிராம் கொடுத்தாலே மக்கள் இறந்துவிடுவார்கள் என்றும் அறியத்தக்கது, உடலில் உள்ள தசைகளை இந்த நஞ்சு தாக்குவதால், உறுப்புகள் செயல் இழந்து இறப்பு வேகமாக ஏற்பட்டுவிடும்.

அதற்கடுத்தபடியாக நாக பாம்புகள், கண்ணாடி விரியன் மற்றும் சுருட்டை விரியன் ஆகியன அதிக நச்சு வாய்ந்த பாம்பினங்களாக விளங்குகின்றன.

தரையில் மட்டும்தான் விஷ ஜந்துக்கள் காணப்படுகின்றனவா என்று கேட்டால், இல்லை என்பதுதான் பதில். ஆழமான கடல்களில் கூட கொடிய ஜந்துக்கள் காணப்படுகின்றன. அதிலும் கொடிய விஷம் கொண்ட பாம்பு ஒன்று கடற்பகுதிகளில் காணப்படுகிறது..

அது, Belcher Snake எனும் கடல் பாம்புதான் உலகிலேயே அதிக விஷமுள்ள நீர்வாழ் பாம்பினமாகும். கடல்வழியில் நிகழும் அதிகமான மரணங்களில் இந்தப் பாம்பால் கடியுண்டு இறப்பதும் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது.

உடலில் கறுப்பு வெள்ளை வரிகளைக் கொண்ட இந்தப்பாம்புதான் கடலில் காணப்படும் பாம்பினங்களில் அதிக விஷத்தினையுடையது. இந்தியப் பெருங்கடலில் தான் இந்தப் பாம்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இவை மீனவர்களின் வலைகளில் சிக்குவதனால் தான் மனிதர்களைத் தாக்க முற்படுகின்றன.

இந்த பாம்பு தாக்கியதும் 30 நிமிடத்திற்குள் விஷத்துக்கான மாற்று மருந்து கொடுக்கவில்லையெனில் இறப்பு நிகழ்வது உறுதி எனக் கண்டறியப்பட்டுள்ளது.

உண்மையில் கடலில் காணப்படும் பாம்பினங்கள் எல்லாமே அதிக விஷத்தைக் கொண்டவையல்ல.



அதோடு கடல் பாம்பினங்கள் தரைப் பாம்புகளை விட மிகவும் பயந்தாங்கொள்ளிகள்.

மனித நடமாட்டத்தைக் கண்டதும் தூர விலகிக்கொள்ளும் தன்மை வாய்ந்தவை. ஆனால் தவறுதலாக தான் அச்சுறுத்தப்பட்டால் மட்டும்தான் இந்த வகைப் பாம்புகள் மனிதர்களைத் தீண்டுகின்றன



## வெளித்தோற்றத்தை நம்பலாமா?

ஒ ரு பெரிய மரத்தோட பொந்துல மைனா ஒன்று இருந்தது. அந்த இடம் அதுக்கு ரொம்ப வசதியாவும், பாதுகாப்பாவும் இருந்தது. ஆனால் கோடைக்காலம் தொடங்கினதும் அதுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. அக்கம் பக்கத்துல எதுவுமே சாப்பிட கிடைக்கலை.

அதனால பக்கத்து கிராமத்துல இருக்கற கோதுமை வயலில் கிடைக்கற தானியங்களைச் சாப்பிட்டுவிட்டு அங்கேயே சந்தோஷமா இருந்தது. காலியா இருந்தா மைனாவோட பொந்துல முயல் ஒன்று வசிக்க ஆரம்பிச்சது.

கொஞ்ச காலம் கழிச்சி குளிர்காலம் வந்தது. மைனாவால வெட்ட வெளியில குளிரைச் சமாளிக்க முடியலை. அதனால அது தன்னோட பழைய இடத்துக்கே திரும்ப வந்தது. தன்னோட பொந்துல ஒரு முயல் சொகுசா படுத்துட்டு இருந்ததைப் பார்த்து அதுக்கு பயங்கர கோபம் வந்தது.

‘ஏய்! யார் நீ? இங்க எதுக்கு வந்து படுத்துட்டிருக்க? இது என்னோட வீடு! நான் கொஞ்ச காலம் இங்க இல்லைன்னா, உடனே நீ வந்து என் இடத்துல நுழைஞ்சிடுவியா? முதல்ல இடத்தைக் காலி பண்ணு’ அப்படின்னு காச்மூச்சுனு கத்த ஆரம்பிச்சிடுச்சு.

‘நீ என்ன பேசறேன்னே எனக்குப் புரியலை. நான் வீடு தேடிக்கிட்டிருந்தப்போ இந்த மரப்பொந்து காலியா இருந்தது. அப்போ இருந்து நான் இங்கதான் வசிக்கிறேன். திடீர்னு நீ இது உன் வீடுன்னு சொன்னா நான் ஒத்துக் கொள்ளமாட்டேன்’ அப்படின்னு முயலும் பதிலுக்குக் கோபமா கத்துச்சு.

ரெண்டுக்குமே இடத்தை விட்டுக் கொடுக்க மனசில்லை. சண்டையும் முடிவுக்கு வர்றதா இல்லை. கடைசில முயல், ‘எனக்கு நதிக்கரைகிட்ட இருக்கற ஒரு பூனைய தெரியும். அதுகிட்ட போயி அட்வைஸ் கேக்கலாம் வா’ அப்படின்னு கூப்பிட்டிச்சு.

‘பூனை கிட்டயா! ஐயோ வேண்டவே வேண்டாம்ப்பா! பூனைகளை நம்பக் கூடாதுன்னு பெரியவங்க சொல்லிக் குடுத்திருக்காங்க’ அப்படின்னு மைனா பயந்து பின்வாங்கியது.

‘அட! அது நீ நினைக்கற மாதிரி இல்லப்பா. அது ரொம்ப புத்தி கூர்மையானது. வயசானது. கடவுள் பக்தி அதிகம் அதுக்கு’ அப்டி இப்படின்னு முயல் சொல்லிச்சு.

ஒரு வழியா மைனாவும் சம்மதிச்சுது. ரெண்டும் கிளம்பி பூனையோட இடத்துக்குச் சென்றன. அதுங்க வர்றதை தூரத்திலேயே பார்த்துட்ட பூனை தியானம் செய்யற மாதிரி நடிச்சுது.

சத்தம் கேட்டு அப்பதான் கண்ணை விழிக்கிற மாதிரி நடிச்சிக்கிட்டே ‘வாங்க., வாங்க. உங்களுக்கு நான் என்ன உதவி செய்யட்டும்’ அப்படின்னு ரொம்ப கனிவா கேட்டுச்சு.

அதுங்க ரெண்டும் தங்களோட பிரச்சினையைச் சொல்ல ஆரம்பிச்சுதுகள்.


பூனையோ, ‘கண்ணுங்களா, நீங்க பேசறது என் காதுலேயே விழலை. கண்ணும் சரியா தெரியலை. கொஞ்சம் கிட்ட வந்து பேசுங்களேன்’ அப்டின்னு சொல்லுச்சு.

மைனாவும், முயலும் கிட்ட வந்ததுதான் தாமதம். அதுங்க இரண்டையுமே அடிச்சுக் கொன்னு தனக்கு உணவா ஆக்கிக்கிச்சு அந்த ஞானப் பூனை.

ஒருத்தர் என்னதான் வெளித்தோற்றத்தை மாத்திக்கிட்டாலும் அவங்களோட அடிப்படை குணம் மாறாதுன்னு பாவம் அந்த மைனாவுக்கும் முயலுக்கும் தெரியாமப் போச்சு.

## பொது அறிவு வினா விடைகள்

01. சீனக்குடியரசின் தந்தை’ என்று போற்றப்படுபவர்?
சன்யாட்சன்
02. ஒருசெல் உயிரியான அமீபாவின் உடல், புரோட்டோபிளாசத்தால் ஆனது.
03. விற்றமின் ஏ’ இன் இராசாயனப் பெயர்
ரெட்டினால்
04. சூரியக்குடும்பத்தைக் கண்டறிந்தவர்
கோபர் நிக்கஸ்
05. பாரத ரத்னா’ விருது பெற்ற முதல் பெண்மணி?
இந்திரா காந்தி
06. சீனர்கள் தான் முறையான நெல் சாகுபடி முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள்.
07. உயிரியல் கோட்பாட்டின் தந்தை’ என்று அழைக்கப்படுபவர்?
சார்ள்ஸ் டார்வின்.
08. இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம்’, லக்னோவில் அமைந்துள்ளது.
09. முதுகெலும்புடன் தோன்றிய முதல் உயிரினம்.
மீன்
10. திருவருட்பா’வை இயற்றியவர்
வள்ளலார்
11. பாலில் ‘லாக்டிக் அமிலம்‘ உள்ளது.
12. குஜராத் மாநிலத்தின் புகழ்பெற்ற நடனம்
தாண்டியா
13. இன்சுலின், கணையத்தில் சுரக்கிறது.
14. பெரு நாட்டின் தலைநகரத்தின் பெயர்.
லிமா
15. முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு
இந்தியா
16. பிரமிட் கோவில் நாடு’ என்று அழைக்கப்படுவது.
பர்மா
17. இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தவர்.
முசோலினி
18. சுமத்ரா தீவில் மலரும் ராப்லிசியா ஆர்னல்டை எனும் பூ தான், உலகிலேயே மிகப் பெரிய பூவாகும்.
19. ஒவ்வொரு மனிதனுக்கும் சுமார் ஒன்றரை கிலோ எடையுடைய மூளை உள்ளது.
20. கால்சியம் கார்பனேட் என்ற ரசாயனப் பொடியைக் கட்டியாக்கி சோக்பீஸ் தயாரிக்கப்படுகிறது.
21. நத்தை ஒரு மைல் (1.6 கிலோமீற்றர்) தூரம் செல்வதற்கு, சுமார் 17 நாள்கள் வரை ஆகும்.
22. ஆக்வா ரெஜியா என்ற திரவத்தில் கரைத்தால், தங்கம் கரைந்து விடும்.
23. பல்பில் உள்ள டங்ஸ்டன் இழை, சுமார் 3400 டிகிரி செல்சியஸ் வரை வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் பெற்றது.
24. மாலைதீவில் விளைகின்ற லொடாய்சியா என்ற இரட்டைப் பனங்கொட்டை தான், உலகிலேயே மிகப்பெரிய விதையாகும்.





## இது எந்த நாடு?

கீழே உள்ள 10 குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட நாட்டைக் குறிக்கின்றன. அந்த நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

**அழகிய தீவுகளின் நாடு**

1. தென் பசிபிக் கடலில் உள்ள தீவு நாடு. 1970ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது.
2. இங்கு வசிப்பவர்களில் சுமார் 40 சதவீதம் மக்கள் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள்.
3. இந்த நாட்டின் தலைநகரம் சுவா.
4. சுற்றுலாவும் சர்க்கரையும் முக்கியமான தொழில்கள். வெள்ளை மணல் கடற்கரைகள், அழகிய தீவுகள், பவளத் திட்டுகள் என்று வசீகரிக்கக் கூடிய நாடு. லவேனா கடற்கரை அற்புதமாக இருக்கும்.
5. ரக்பி மிகப் பிரபலமான விளையாட்டு.
6. இந்த நாட்டில் உள்ள 323 தீவுகளில் 100 தீவுகளில் மட்டுமே மனிதர்கள் வசிக்கிறார்கள்.
7. ஹொலண்ட் நாட்டைச் சேர்ந்த அபேல் டாஸ்மான் என்பவர்தான் இந்த நாட்டைக் கண்டுபிடித்த முதல் ஐரோப்பியர்.
8. இந்த நாட்டின் பிரதமராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மகேந்திர பால் சௌத்ரி இருந்திருக்கிறார்.
9. உலகப் புகழ்பெற்ற கோல்ஃப் வீரர் விஜய்சிங் இந்த நாட்டைச் சேர்ந்தவர்.
10. "Fun In Jungle Island' என்பதில் இந்த நாட்டின் பெயர் ஒளிந்திருக்கிறது.

**விடை: ஃபிஜி**

# கடந்த மூன்று வருடகாலப் பகுதியில் 33,840 பேருக்கு இரட்டை பிரஜாவுரிமை!

மூன்று, நான்கு தசாப்த காலங்களாக ஏதோ ஒரு காரணத்திற்காக வெளிநாடுகளில் குடிபெயர்ந்து அல்லது தஞ்சம் புகுந்து அந்த நாட்டின் பிரஜைகளாக வாழ்பவர்கள் இந்த நாட்டின் சொத்துக்கள் என்று உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்தார்.

பத்தரமுல்ல, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற 23 ஆவது இரட்டைக்குடியுரிமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் அமைச்சர் உரையாற்றுகையில் –

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் விரும்பியோ விரும்பாமலோ இந்த நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தவர்கள் ஏராளம். நீங்கள் உங்கள் சொந்த நாட்டிற்கு திருப்பி வந்து வாழ்வதற்கு கூட இந்த நாட்டின் விசா தேவைப்பட்டது. அப்படியே விசா பெற்றுக்கொண்டாலும் ஒரு சில மாதங்களில் புதுப்பிக்கவேண்டும் அல்லது வாழ்ந்த நாட்டிற்கு திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதனை கருத்தில்கொண்டு இடைக்காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த இரட்டைபிரஜாவுரிமை செயற்பாடு மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் ஆகியோரது எதிர்பார்ப்பாக இருந்தது.

எனவே அவர்களது கோரிக்கைகளுக்கு அமைவாக 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே விசேட சட்டமூலம் உருவாக்கப்பட்டு இந்த பிரஜாவுரிமை வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்பாட்டின் மூலம் இதுவரையிலே, இன்று வழங்கப்படும் 840 சான்றிதழ்கள் உள்ளிட்ட 33 ஆயிரத்து 840 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை கடந்த மூன்று வருடங்களில் இடம்பெற்றவையாகும்.

இந்த நாட்டின் வளங்கள் நீங்கள் . எமது எதிர்பார்ப்பு நீங்கள் அனைவரும்



இந்த நாட்டிற்கு மீண்டும் வந்து , இந்த நாட்டின் உரிமையாளர்களாக வேண்டும் என்பதே. உங்கள் சேவைகள் இந்த நாட்டிற்கு தேவையாக இருக்கின்றமையை நீங்கள் உணரவேண்டும். நீங்கள் வெளிநாடுகளில் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக அல்லது வேறு உத்தியோகத்தர்களாக மற்றும் வியாபாரிகளாக கடமையாற்றக்கூடும்.

உங்கள் பிள்ளைகள் அங்கே மாணவர்களாக கல்வி பயில்பவர்களாகவும், பயின்றவர்களாகவும் இருப்பார்கள் எனவே அவர்கள் அனைவரும் உங்கள் சொந்த நாடான இலங்கைக்கு வருகை தரவேண்டும். உங்களுடைய முதலீடுகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் இந்த நாட்டிற்கு மிக மிக அவசியம்.

இலங்கை தாய்திருநாட்டிற்கு உங்கள் சேவை மீண்டும் முற்றுமுழுதாக கிடைக்க வேண்டும் என்பதே நமது அபிலாஷை. நீங்கள் இந்த நாட்டில் அனைத்து உரிமையும் கொண்டவர்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர், விசா மற்றும் எல்லை கட்டுப்பாட்டுக்கு பொறுப்பான ஹெட்டியாராச்சி உள்ளிட்ட பல அதிகாரிகள் மற்றும் நேற்றைய தினம் இரட்டை குடியுரிமை சான்றிதழ் பெற்றுக்கொண்டவர்கள் கலந்துகொண்டனர்.

## அரை நிர்வாணமாக நின்ற இளைஞர்களில் மூவர் கைது!



பிதுரங்கல கல் மீது எறி, சீகிரியா பூமியை நோக்கி நிர்வாணமாக நின்று புகைப்படம் எடுத்த இளைஞர்களில் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீகிரிய குன்றை அவமதிக்கும் வகையில் நடந்துகொண்டதாலேயே இளைஞர்களை உடனடியாக கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு பலர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இந்த மூவரையும் கைது செய்துள்ளோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ரவிக்கு எதிரான எழுத்து மூல விமர்சனத்தை முன்வைக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினருனக்கு கால அவகாசம்!



கொழும்பு, செப். 27

பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை ஆணைக்கழுவில் பொய் சாட்சியம் வழங்கியமைக்கு எதிராக, முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான எழுத்து மூல விமர்சனத்தை முன் வைக்க, கொழும்பு நீதிவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்குக் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இது தொடர்பிலான மனு, நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொண்ட போது, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கால அவகாசம் கோரப்பட்டமைக்கு அமைவாக பிரதான நீதிவான் ரங்க திஸாநாயக்கவினால் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## யானை தந்தங்கள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் கைது!

கொழும்பு – தெமட்டகொடை பகுதியில்வைத்து நான்கு யானை தந்தங்கள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரிடமிருந்து கஜமுத்துக்கள் கொண்ட யானை தந்தங்களாக இருக்குமெனச் சந்தேகிக்கப்படும் 4 யானை தந்தங்களும் அத்தோடு, 4 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டன என தெரிவித்தப் பொலிஸார், இந்த நபரை மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளோம் என்றும் தெரிவித்தனர்.

இந்த சந்தேகநபர் தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 21வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## வன்னியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்!



வன்னியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினரால் குடிதண்ணீர் விநியோகிக்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வன்னி பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சுமார் 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு வன்னி பாதுகாப்பு படை தலைமையகத்தால் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டுள்ளது.

வன்னி பிராந்திய மக்கள் வறட்சி காரணமாக எதிர்கொள்ளும் குடிதண்ணீர் பிரச்சினையை உணர்ந்த இராணுவ உயரதிகாரிகள் இந்தப் பகுதியில் நலன்புரி நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு முன்வந்தமை குறிப்பிடத்தக்கது.

## கலாமணியின் இரண்டு நூல்கள் சனியன்று வெளியீடு

கலாநிதி த.கலாமணியின் 'இலக்கியமும் உளவியலும்', 'தரிசனப் பார்வைகள்' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா, நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, அல்வாய் கலையகத்தில் எழுத்தாளர் அ.பௌநந்தி தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் வெளியீட்டுரையை எழுத்தாளர் மா.செல்வதாஸும், கருத்துரைகளை எழுத்தாளர்கள் த.அஜந்தகுமார், புலோலியூர் வேல்நந்தகுமார் ஆகியோரும் நிகழ்த்துவர்.

முதன்மைப் பிரதிகளை விரிவுரையாளர் க.பாஸ்கரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் தசிவகுமார், ஆசிரியர் நா.கேதீஸ்வரன் ஆகியோர் பெற்றுக் கொள்வர். (இ)

## நேவி சம்பத்தின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல் குற்றச்சாட்டில் கைதான நேவி சம்பத் என்றழைக்கப்படும் பிரசாத் சந்தன ஹெட்டியாராச்சிக்கு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நேவி சம்பத்தை நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே நீதிவான் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## பரிசளிப்பு விழா

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி அ.ஜெயக்குமரனும் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்வி அலுவலகர் ரி.மாதவனும் கலந்து கொள்வர். (இ)




யாழ். குருநகர் கிறீன் பில்ட் சன சமூக நிலையத்தின் அறுபதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட மரம் நடுகை விழாவின் போது கழகத்தின் உதவிச் செயலாளர் திருமதி. யே. சறோஜா மரக்கன்றுகளை விநியோகிப்பதையும் மரம் நடுவதையும் படத்தில் காணலாம். (இ)

காலைக்கதிர்
Kalaikkathir



# ஆப்கானில் பீரங்கித் தாக்குதல்; ஒரே குடும்பத்தில் ஒன்பது பேர் பலி!



சம்பவத்தில் பலி; படுகாயம்

ஆப்கானிஸ்தானில் பீரங்கி குண்டு, குடியிருப்பு பகுதியில் விழுந்து வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் பரிதாபமாக பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து 18 ஆவது ஆண்டாக உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. இந்த நிலையில் அங்குள்ள கபிசா மாகாணம், தகாப் மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை பாதுகாப்பு படைகளுக்கும், தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது.

அப்போது அல்மாஸ்கேல் என்ற கிராமத்தில் ஒரு பீரங்கி குண்டு, குடியிருப்பு பகுதியில் விழுந்து வெடித்தது . இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

இதுபற்றி தகாப் மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரி முகமது நயீம் சபி கூறும் போது –

இந்த மாவட்டத்தில் பல இடங்களிலும் தலிபான்களுக்கும், பாதுகாப்பு படைகளுக்கும் இடையே மோதல்கள் நடந்து வருகின்றன. இதில் அல்மாஸ்கேல் கிராமத்தில் பத்ராப் பகுதியில் ஒரு பீரங்கி குண்டு விழுந்து பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரத்தில் இந்த தாக்குதலை நடத்தியது யார் என அவர் குறிப்பிட வில்லை.

இதற்கிடையே தலிபான் செய்தி தொடர்பாளர் ஜபிகுல்லா முஜாகித் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், அல்மாஸ்கேல் கிராமத்தில் அமெரிக்க படைகள் நடத்திய வான்தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் பலியாகி விட்டனர் எனக் கூறி உள்ளார்.

## தான்சானியா படகு கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தோர் 224 ஆக அதிகரிப்பு!



உகாரா, செப். 27

தான்சானியா நாட்டின் விக்டோரியா ஏரியில் சென்ற படகு கவிழ்ந்து தண்ணீரில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் பலியானோர் எண்ணிக்கை 224 ஆக அதிகரித்துள்ளது.

ஆபிரிக்க நாடான தான்சானியாவின் விக்டோரியா ஏரியில் சென்ற சொகுசு படகு ஒன்று உகாரா தீவு அருகே தண்ணீரில் மூழ்கியது. தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் அங்கு விரைந்து சென்றனர்.

படகு முழுவதும் தண்ணீரில் மூழ்கிய விபத்தில் பலர் பலியாகினர். விபத்தில் பலியானவர்கள் எண்ணிக்கை 207 என தகவல்கள் வெளியாகின. மேலும், உயிருடன் இருப்பவர்களை மீட்கும் பணியில் தொடர்ந்து நீச்சல் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் சிலரை உயிருடன் மீட்டு வந்தனர்.

இந்த நிலையில், தான்சானியாவின் விக்டோரியா ஏரியில் படகு கவிழ்ந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 224 ஆகஅதிகரித்துள்ளதுஎனமீட்புக்குழுவினர்தெரிவித்துள்ளனர். தொடர்ந்து கடலில் மூழ்கியவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை; சுவீடன் பிரதமர் பதவி நீக்கம்!

ஸ்டாக்ஹோம், செப். 27

சுவீடன் நாட்டின் பிரதமர் ஸ்டீபன் லாப்வென் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறியதை அடுத்து அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சுவீடன் நாட்டின் பிரதமராக ஸ்டீபன் லாப்வென் இருந்து வந்தார். அவருக்கு எதிராக அந்தநாட்டின்நாடாளுமன்றத்தில்நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. அதன் மீது நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடந்தது. இதில்நம்பிக்கையில்லாப்பிரேரணை ஆதரவாக 204 வாக்குகளும், எதிராக 142 வாக்குகளும் விழுந்தன. இதையடுத்து, அந்தப் பிரேரணை நிறைவேறியது. இதனால் பிரதமர் பதவியில் இருந்து ஸ்டீபன் லாப்வென் நீக்கப்பட்டார்.

அடுத்து அங்கு ஆட்சி அமைக்கப்போவது யார்என்றகேள்விஎழுந்துள்ளது. இதுதொடர்பாக கட்சித் தலைவர்களுடன் நாடாளுமன்ற சபாநாயகர் ஆண்ட்ரியாஸ் நார்லென் பேச்சு நடத்துவார் எனத் தகவல்கள் கூறுகின்றன.

புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்படும் வரை ஸ்டீபன் லாப்வென், இடைக்கால பிரதமராக இருப்பார் எனவும் அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## 49 நாள் கடலில் தவித்த மீனவர் உயிருடன் மீட்பு!

இந்தோனேசியாவில் கடந்த ஜூலை மாதம் புயலில் படகுடன் அடித்து செல்லப்பட்ட மீனவர் 49 நாள்களுக்கு பிறகு உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தோனேசியாவின் சுலாவேசி தீவைச் சேர்ந்தவர் ஆல்டி நோவல் அடிலாங் (வயது19). இவர் படகில் இருந்தபடி மீன்களை பிடித்து விற்று வருகிறார். சில கொம்பெனிகள் நேரடியாக வந்து அவரிடம் இருந்து மீன்களை விலைக்கு வாங்கிச் செல்கின்றன.

கடந்த ஜூலை மாதம் இந்தோனேசியாவில் புயல் தாக்கியது. அதில் அவரது படகு அடித்துச் செல்லப்பட்டது. அதைத்தொடர்ந்து அவர் கடலில் தொடர்ந்து தனியாக பயணம் செய்து கொண்டே இருந்தார்.

49 நாள்கள் தொடர்ந்து பயணம் செய்த அவர் ஜப்பான் கடற்கரையை சென்றடைந்தார். வழியில் 10 இற்கும் மேற்பட்ட கப்பல்கள் கடந்து சென்றன. அவர்களிடம் உதவி கோரினார். யாரும் அவரை காப்பாற்ற முன்வரவில்லை.

49நாள்களுக்குபிறகுபனாமா நாட்டுபேங்கர்கப்பலுக்குரேடியோ சிக்னல் கொடுத்து தான் ஆபத்தில் இருப்பதை உணர்த்தினார். அவர்கள் அடிலாங்கை உயிருடன் மீட்டு ஜப்பான் அழைத்துச் சென்றனர். அங்கிருந்து அவர் இந்தோனேசியாவில்உள்ளதனது சொந்த ஊரான மனாடோவுக்குச் சென்றார்.

கடலில் தனியாக பயணம் செய்த காலத்தில் மீன்களைப் பிடித்து அவற்றை படகு வீட்டின் கட்டைகளை விறகாக்கி சமைத்து சாப்பிட்டு உயிர் பிழைத்தேன் என்று அவர் கூறியுள்ளார்.

கடல் நீரை துணியால் வடிகட்டி சிறிது உப்பை அகற்றி தண்ணீர் குடித்தேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஐ.நா.பொதுச்சபைக்கு சென்ற மூன்று மாத கைக்குழந்தை!




நியூயோர்க், செப். 27

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்ட நியூஸிலாந்து பிரதமர் ஜெசிந்தாவின் 3 மாத கைக்குழந்தை வரலாற்று சாதனை படைத்துள்ளது.

நியூஸிலாந்து நாட்டின் பிரதமராக ஜெசிந்தா ஆர்டெர்ன் கடந்த ஆண்டு ஒக்டோபட் மாதம் பதவியேற்றார். 37 வயதில் பிரதமரான ஜெசிந்தா மிகச்சிறிய வயதில் நாட்டின் தலைவராக பொறுப்பேற்ற உலகின் முதல் பெண் என்ற பெருமையைப் பெற்றிருந்தார்.

நியூஸிலாந்து ரி.வி. தொகுப்பாளரான கிளார்க் கேபோர்ட் என்பவருடன் வாழ்ந்து வந்த ஜெசிந்தா, கடந்த ஜூன் மாதம் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவுக்கு அடுத்த படியாக பதவியில் இருக்கும் போது குழந்தை பெற்ற பெண் என்ற பெயரை ஜெசிந்தா பெற்றார்.

இந்த நிலையில், நியூயோர்க் நகரில் நடந்து வரும் ஐ.நா. பொதுக்கூட்டத்தில் ஜெசிந்தா தனது 3 மாத கைக்குழந்தை அட்ரென் கேபோர்ட் உடன் வந்து கலந்து கொண்டார்.

பெண் தலைவர் ஒருவர் ஐ.நா. கூட்டத்தில் குழந்தையுடன் வந்து பங்கேற்பது இதுவே முதல்முறை என்பதால் ஜெசிந்தா சாதனை படைத்துள்ளார். அவரது குழந்தைக்கு நியூஸிலாந்தின் முதல் குழந்தை என ஐ.நாவின் அடையாள அட்டையும் வழங்கப்பட்டிருக்கிறது.

### ஈரான் மீதான பொருளாதாரத் தடை:

## அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி செயற்படும் நிலையில் 5 நாடுகள்!

ஈரான் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை மீறி அந்த நாட்டுடன் வர்த்தகம் செய்ய புதிய வழிமுறைகளை உருவாக்க வேண்டும் என பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா உள்ளிட்ட 5 நாடுகள் முடிவு செய்துள்ளன.

ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தத்தை ரத்து செய்த அமெரிக்கா, அந்த நாட்டின் மீது தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்தது. மேலும், ஈரானுடன் எந்த நாடுகளும் கச்சா எண்ணெய் உள்ளிட்ட வர்த்தகங்களை நவம்பர் மாதத்துக்கு பின் மேற்கொள்ளக் கூடாது என எச்சரிக்கையும் விடுத்தது.



இந்நிலையில், ஐ.நா. பொதுக்கூட்டத்தின் ஒரு பகுதியாக பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர் சந்திப்பு ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்றது. அதில், அமெரிக்காவின் பொருளாதாரத் தடை குறித்து விவாதிக்கப்பட்டது.

இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் பெடரிகா மொஜர்னி கூறும்போது –

ஈரானுடன் ஏற்றுமதி செய்வது தொடர்பாக செலுத்தப்படும் பணம். ஈரானுடன் சட்டப்பூர்வமான வர்த்தகத்தை தொடருவதற்கு உதவும் பொருளாதார இயக்குநர்களுக்கு செய்யப்படும் உதவிகள் குறித்து உத்தரவாதம் அளிக்க சிறப்பு வழி முறைகளை உருவாக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## போர் நடந்த வேளை சிங்கள ராணுவத்துக்கு

# தி.மு.க. – காங்கிரஸ் அரசு உதவியமையால் பல்லாயிரம் ஈழத் தமிழர் கொன்று குவிப்பு

## சேலம் கூட்டத்தில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி கண்டனம்

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற போரில் சிங்கள ராணுவத்திற்கு தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி அரசு உதவியதன் மூலம் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

எனவே, அ.தி.மு.க.வைப் பற்றி பேசுவதற்கு மு.க.ஸ்டாலினுக்கு தகுதி இல்லை என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலம் மாநகர் மற்றும் புறநகர் மாவட்ட அ.தி. மு.க. சார்பில் சேலம் கோட்டை மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை கண்டன பொதுக்கூட்டம் நடந்தது.

ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற போரில் சிங்கள ராணுவத்திற்கு தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி அரசு உதவியதன் மூலம் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு காரணமான தி.மு.க. – காங்கிரஸ் கட்சியினரை போர்க் குற்ற விசாரணைக்கு உட்படுத்தி தண்டிக்கக் கோரி இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில் தமிழக முதல்வர் மேலும் தெரிவித்தவை வருமாறு –



இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற போரில் பல்லாயிரக் கணக்கான ஈழத்தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அது மிகவும் துயர மான சம்பவம். யாரும் மறந்து விடமுடியாது.

அண்மையில் இந்தியாவுக்கு வந்திருந்த மஹிந்த ராஜபக்ஷ , இலங்கையில் நடந்த ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடந்த போர் பற்றி மிகத் தெளிவாகக் கூறினார்.

அவர் கூறிய விடயங்களால் இலங்கையில் என்ன நடந்தது? என்பது பற்றிய உண்மை தற்போது வெளிச்சத்துக்கு வந்தது. இதனால் நாட்டு மக்களுக்கு உண்மை தெரிய வேண்டும் என்பதற்காக தற்போது அ.தி.மு.க. சார்பில் கண்டனப் பொதுக் கூட்டங்களை நடத்துகிறோம்.

இலங்கையில் போர் முடிந்துவிட்டது என்று கருதி பதுங்குகுழியிலும், வீட்டிற்குள்ளேயும் பதுங்கி இருந்த ஈழத் தமிழர்கள் வெளியே வந்தார்கள். ஆனால் அதைப் பயன்படுத்தி மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் விமானம் மூலமாக குண்டு மழை பொழிந்து அப்பாவி ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்தனர்.

அப்போது தமிழகத்தில் ஆட்சியில் இருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, மூன்றரை மணி நேரம் உண்ணாவிரத நாடகத்தை அரங்கேற்றினார். பின்னர் அங்கு போர் நிறுத்தப்பட்டுவிட்டது என்றும் மக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் ஒரு வாக்குறுதி அளித்தார்.

அதை தமிழக மக்களும் நம்பினார்கள். ஆனால் அங்கு லட்சக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அதற்கு தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி அரசுகள் துணைபோயின.

இதனால் ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடந்த போர் சம்பந்தமாக நடந்த உண்மையை மத்திய அரசுக்கும், சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தக் கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தப்படுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

(கு)

# தமிழகத்திலேயே இருந்தால் சரிவராது; தேசிய அரசியலில் கால் பதிக்கிறேன்!

## செய்தியாளர் மத்தியில் டி.ராஜேந்தர் தெரிவிப்பு



தேசிய அரசியலில் கால்பதிக்க உள்ளேன் என்று லட்சிய தி.மு.கவின் தலைவர் டி.ராஜேந்தர் தெரிவித்துள்ளார்.

சென்னை தியாகராயநகரில் நேற்றுமுன்தினம் டி.ராஜேந்தர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

சினிமாவில் நான் புறக்கணிக்கப்பட்டவன். பட விழாவொன்றில் பேசிய மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி நான் அவருடைய பாதி எனக் கூறினார். எனக்கு அரசியலில் பிள்ளையார் சுழி போட்டவர் மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். தான். தி.மு.கவில் இருந்து வைகோ பிரிந்தவுடன் கருணாநிதி என்னை தி.மு.கவில் இணைய அழைத்தார். கொள்கை பரப்புச் செயலாளர் பதவி கொடுத்தார்.

தி.மு.கவில் இருந்து விலகிய பிறகு, அ.தி.மு.கவுக்கு ஆதரவு தெரிவித்தேன். 2005 இல் காஞ்சிபுரம் மற்றும் கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தலில் அ.தி.மு.கவுக்கு ஆதரவு தெரிவித்து பிரசாரம் செய்ததற்காக மறைந்த முதல்வர் ஜெயலலிதா எனக்கு நன்றி தெரிவித்தார்.

எனது கட்சியான லட்சிய தி.மு.க. சின்னம் கூட இல்லாத சிறிய கட்சியாக இருந்தாலும், எதிர்வரும் ஒக்டோபர் 3 ஆம் திகதி எனது பிறந்த நாளன்று பொதுக்குழுவை கூட்டி புதிய பரிணாமத்தை அறிவிக்க உள்ளேன். மேலும், மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளேன். வரும் நாடாளுமன்ற தேர்தலையொட்டி எனது அடுத்தகட்ட நடவடிக்கைகள் இருக்கும். இரண்டு திரைப்படங்கள் எடுக்கிறேன்.

தமிழகத்திலேயே இருந்தால் சரிவராது, அதனால், தேசிய அரசியலில் கால்பதிக்க உள்ளேன். அதற்காக இந்தியில் 2 திரைப்படங்கள் எடுக்க உள்ளேன். அது குறித்தும் எனது பிறந்த நாளன்று அறிவிப்பேன்.

சிலர் கட்சி ஆரம்பிக்கப் போகிறேன் எனக் கூறி வருகின்றனர். என் மகனின் எஸ்.டி.ஆர். மன்றம் புனரமைப்பு செய்யப்படும் என்றும் டி.ராஜேந்தர் தெரிவித்துள்ளார்.

# கருணாஸை 7 நாள் காவலில் வைத்து விசாரிக்க பொலிஸார் மனு தாக்கல்!

நடிகர் கருணாஸை 7 நாள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்கும்படி பொலிஸார் மனு தாக்கல் செய்துள்ளனர்.

தமிழக முதல்வர் மற்றும் பொலிஸாரை அவதூறாக பேசினார் என நடிகரும் எம்.எல்.ஏவுமான கருணாஸை நுங்கம்பாக்கம் பொலிஸார் கைது செய்தனர். யூடியூப்பில் வெளியான வீடியோவை ஆதாரமாகக் கொண்டு 8 பிரிவுகளின் கீழ் கருணாஸ் மீது வழக்குகள் பதியப்பட்டு எழும்பூர் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். பின்னர் அவர் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதையடுத்து அவருக்கு பிணை கோரி எழும்பூர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக கருணாஸ் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு பிணை வழங்க வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், கருணாஸை 7 நாள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்கும்படி பொலிஸார் தரப்பில் நேற்று முன்தினம் எழும்பூர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடியை அகற்ற காங்., பாகிஸ்தான் விருப்பம்!

## பா.ஜ.க. குற்றச்சாட்டு

பிரதமர் மோடியை இந்திய அரசியலில் இருந்து அகற்ற வேண்டும் என்று காங்கிரஸும் பாகிஸ்தானும் விரும்புகின்றன என்று பா.ஜ.க. குற்றம்சாட்டியுள்ளது.

பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் சம்பித் பத்ரா நேற்று முன்தினம் டில்லியில் பேட்டியளித்தார். அப்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :–

ராகுல் காந்தியை பெரிய தலைவராக்க வேண்டும் என்று பாகிஸ்தான் தலைவர்கள் மற்றும் ஊழல், பரம்பரை ஆட்சி, வாக்கு வங்கி அரசியலுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் நிலையில் இந்தியாவில் உள்ள சிலரும் விரும்புகின்றனர்.

அதனால்தான் பிரதமர் மோடிக்கு எதிராக அவதூறுகளைக் கூறி வருகின்றனர். காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்காக பாகிஸ்தான் தலைவர்கள் டுவிட்டர் மூலம் பிரசாரம் செய்கின்றனர். மோடிக்கு எதிரான தங்கள் கூட்டணியில் பாகிஸ்தானையும் காங்கிரஸ் சேர்த்துக் கொண்டு விட்டது.

நாட்டின் பாதுகாப்பு, ஊழலுக்கு எதிரான நடவடிக்கை ஆகியவற்றால் பாகிஸ்தானும் காங்கிரஸும் விரக்தியடைந்துள்ளன. பிரதமர் மோடியை அரசியலில் இருந்து அகற்ற அவை விரும்புகின்றன.

ஆனால், சாதாரண மக்கள், தலித்துகள், ஏழைகள், சமூகத்தில் பின்தங்கிய மக்கள் பிரதமர் மோடிக்கு ஆதரவாக உள்ளனர். எனவே, மோடியை யாராலும் அகற்ற முடியாது என்றும் சம்பித் பத்ரா கூறியுள்ளார்.

# லட்சக்கணக்கான மக்களை வறுமையின் பிடியிலிருந்து இந்தியா மீட்டுள்ளது என ட்ரம்ப் புகழாரம்!



லட்சக்கணக் கானோரை வறுமையின் பிடியில் இருந்து இந்தியா வெற்றிகரமாக மீட்டெடுத்துள்ளது என்று அமெரிக்கஜனாதிபதிடொனால்ட் ட்ரம்ப் புகழாரம் சூட்டியுள்ளார்.

நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச் சபை கூட்டம் நடைபெற்றது. இதில் நடைபெற்ற பொது விவாதத்தில், ட்ரம்ப் பேசுகையில், 100 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட இந்தியா, சுதந்திரமான சமூகத்தைக் கொண்டது. வறுமையின் பிடியில் இருந்து லட்சக் கணக்கானோரை வெற்றிகரமாக இந்தியா மீட்டெடுத்துள்ளது. – என்றார்.

ஐ.நா. பொது சபையில் நடைபெற்ற பொது விவாதத்தில் ட்ரம்ப் பேசுவது இது 2 ஆவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## எமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து வகையிலும் பலமானநாடுஎன்றவகையில்நான் உங்களிடம் கேட்டுநிற்பது, எமது பிரச்சினைகளைத்தீர்த்துக்கொள்வதற்கும், ஒரு சுயாதீன நாடு என்ற வகையில் எமது உரிமைகளை உறுதிப்படுத்தியவாறு முன்னோக்கிச் செல்வதற்கும் எமக்கு இடமளியுங்கள்

– இவ்வாறு ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தொடரில் பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளார் ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன.

ஐ.நா. பொதுச் சபையின் 73ஆவது கூட்டத் தொடரில் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை உரையாற்றினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இதன்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவரது உரையின் முழு வடிவம் வருமாறு:

இலங்கை, ஐநா சபையின் ஒரு அங்கத்துவ நாடு என்ற வகையில் இங்கே காணப்படும் அனைத்துவித இணக்கப்பாடுகளையும் உடன்படிக்கைகளையும் முற்றுமுழுதாகப் பின்பற்றுவதற்கும் அவற்றைச் செயற்படுத்துவதற்கும் முழுமையாக இணங்கியிருக்கிறது.

கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலாக இலங்கையின் அரச தலைவராகச் செயற்பட்டு வரும் என்னால், நாடும் அரசும் அடைந்திருக்கும் முன்னேற்றத்தைப் பற்றி மிகவும் மகிழ்ச்சியடை யக் கூடியதாக உள்ளது.

2015 ஜனவரி 08ஆம் திகதி மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டு இலங்கையின் அரசதலைவராகப் பொறுப்பேற்றபோது, எனது நாட்டில் தற்போது நான் வகிக்கும் பதவிக்காக வழங்கப்பட்டிருந்த எல்லையற்ற நிறைவேற்று அதிகாரங்கள், அதாவது ஒரு அரசனுக்கும் அப்பால் பேரரசனுக்கான அதிகாரங்களுக்குச் சமமாக இருந்த எல்லையற்ற அதிகாரங்களை, இந்தக் காலகட்டத்தில், அப்பதவியை ஏற்கின்ற ஒரு அரச தலைவன் என்ற வகையிலும் ஒரு மனிதன் என்ற வகையிலும் முன்னெடுக்க வேண்டிய மிக முக்கியமான வரலாற்றுக் கடமையாக இருந்த, எனக்கு கிடைத்திருந்த அந்த எல்லையற்ற அதிகாரங்களைக் குறைத்து அவற்றை இலங்கையின் நாடாளுமன்றத்துக்கு கையளிப்பதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டேன் என்பதை இங்கே தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த மூன்றரை வருடங்களில் ஜனநாயக உரிமைகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. மனித உரிமைகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. மனிதர்களின் சுதந்திரம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஊடக சுதந்திரம் பரந்தளவில் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. நீதித்துறையின்சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆகையினால் இலங்கையில் மூன்றரை வருடங்களுக்கு முன்பிருந்த நிலை இல்லாமல், முன்னேறமடைந்த, மனிதநேயம் மிக்க, ஒரு முழுமையான சமூகத்தில்வாழும் நிலைமையே தற்போது காணப்படுகின்றது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஐநாவின் அங்கத்தவர்கள் என்ற ரீதியில் எமக்கிடையில் இருக்கின்ற கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு, சர்வதேச ரீதியில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள், பொருளாதார ரீதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள், மானிடத்திற்குச் சவாலாக அமைகின்ற விடயங்கள் ஆகியவற்றை மிக ஆழமாக ஆராய்ந்து பார்த்து அவற்றுக்குமுகம்கொடுக்கவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

குறிப்பாக சர்வதேச அரசியலில்புதிதாகஏற்படுகின்றமுனைப்புக்களை பற்றி கதைக்கின்ற போது, இன்று உலகெங்கும் பெருந்தொகையான அகதிகள் காணப்படுகின்றனர். அத்தோடு அந்த அகதிகளின் பிரச்சினை மிகப் பரந்தவொரு பிரச்சினை என்பதையும் நாம் அறிவோம்.

ஆகவே அதற்கு ஐ.நா. சபையும் அதன் உறுப்பு நாடுகளும் அதனோடு இணைந்த அமைப்புக்களும் மேற்கொண்டு வருகின்ற பணிகள் தற்போது உள்ளதை விட மேலும் பலமானதாகவும், பரந்துபட்ட ரீதியிலும் அமைய வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

எமது நாடு வெளிநாட்டுக் கொள்கையில் நடுநிலையான கொள்கையினையே பின்பற்றி வருகின்றது. அத்தோடு இலங்கை அணிசேரா நாடுகளின் அமைப்பில் மிகவும் மூத்த உறுப்பு நாடொன்றாகும்.

1976ஆம் ஆண்டு இலங்கையில் மிக நேர்த்தியாக அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு நடத்தப்பட்டது என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கையின் கீழ் உலகின் அனைத்து நாடுகளையும் இனங்களையும், நேசநாடுகளாகவும் நேச இனங் களாகவும் கருதியே நாம் எமது தொடர்புகளை பேணி வருகிறோம்.

நான் அறிந்த வகையில், இத்தருணத்தில் இலங்கையாகிய எமது நாட்டுக்கு உலகில் எந்தவொரு எதிரியும் இல்லையென்பதையும் இங்கு நான் கூறிவிரும்புவதுடன், அந்த நிலமை ஏற்பட்டிருப்பதையிட்டும் மகிழ்ச்சியடைகிறேன்.

சர்வதேச அரசியலில் ஏற்படுகின்ற மாற்றங்களைப் பற்றி கதைக்கின்றபோது, குறிப்பாக பலஸ்தீன மக்களின் பிரச்சினை பற்றி கதைக்கின்றபோது, ஐநா சபையும் உலகப் பலசாலிகளும் தற்போது பின்பற்றும் கொள்கையில், அதைவிட புரிந்துணர்வுடன் கூடிய பரந்துபட்ட நோக்குடன் செயற்படவேண்டுமென்பதே எனது நம்பிக்கையாகும்.

பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு இலங்கைஎன்றும் ஆதரவளித்து வந்தது என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டு கூற விரும்புகிறேன். ஆகவே பலஸ்தீனம் தொடர்பில்ஏற்படுகின்றபல்வேறு மனிதநேயமற்ற செயற்பாடுகளை கருத்திற்கொண்டு பலஸ்தீன மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதற்கு ஐ.நா. சபையும் அனைத்து உறுப்பு நாடுகளும் மனிதநேயம் மிக்கப் பெரும் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

தற்போது உலகில் காணப்படும் பிரச்சினைகளுள் வறுமையே மிக முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஆகையால் ஐ.நா. சபை வறுமையொழிப்பு தொடர்பில் உலக மக்களுக்காக இப்போது முன்னெடுப்பதைவிட மிகப் பரந்ததொரு வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கவேண்டுமென்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வறுமைதொடர்பில் நோக்கும் போது உலக சனத்தொகையில் பல கோடி மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். வானிலை மற்றும் காலநிலை மாற்றங்கள், வருமானம் ஈட்டுதலில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் அரசசெயற்பாடுகளில் சாதாரண பொதுமக்கள் மீது கவனம் செலுத்துவதில் காணப்படுகின்ற குறைபாடுகளுமே இந்த வறுமையில் பெரும் தாக்கம் செலுத்துகின்றன.

வானிலை மற்றும் காலநிலையில் ஏற்படுகின்ற சீர்குலைவு காரணமாக உலகளாவிய ரீதியில் ஏற்படுகின்ற பாரிய பிரச்சினைகள், குறிப்பாக பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற சரிவுகளும் வறுமை நிலை வளர்வதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றன.

ஆகையால் வறுமையை பற்றிபேசுகின்றபோது, வானிலை மற்றும் காலநிலையில் ஏற்படும் சீர்குலைவுகள் மிகப் பாரியளவில் ஏற்படுகின்ற நாடுகளில், அதனால் பாதிப்படைகின்ற அந்நாட்டு மக்களின் இயல்பு நிலையைக்கட்டியெழுப்புவதற்கு உதவி, ஒத்தாசை வழங்க வேண்டியது மிகவும் அவசியமான ஒரு விடயமாகும்.

இன்றுசர்வதேசரீதியில் இந்த வறுமையென்பது பெரும் பிரச்சினையாக இருந்துவரும் அதேவேளை, ஆயுத விற்பனை, போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத ஔடத வியாபாரம் ஆகியனவும் மானிட சமூகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன.

ஆகையால் இந்த அனைத்துப் பிரச்சினைகள் பற்றியும் கவனம் செலுத்துகின்றபோது, குறிப்பாக நேற்று காலையில் ஐநாவின் அனுசரணையில், அமெரிக்க ஜனாதிபதிடொனால்ட் ட்ரம்பின் தலைமையில், சட்டவிரோத போதைப்பொருள்கள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் பற்றி உலகளாவியரீதியில் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடு தொடர்பில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அத்தோடு போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் உலகின் அனைத்து நாடுகளும் ஐ.நா. சபையின் ஒத்துழைப்பில் இப்போது செயற்படுத்தி வருவதை விட மிக பெரியளவிலான செயற்திட்டங்களை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கவேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அத்தோடு ஐ.நா. சபையின் பன்முக வேலைத்திட்டங்களின் கீழ் அதன் அங்கத்துவ நாடுகளினதும் ஒட்டுமொத்த உலகத்தினதும் மேம்பாட்டினை கருத்திற்கொண்டு, ஆறு, குளம், செடி, கொடிகள், விலங்கினங்கள், சூரிய ஒளி உள்ளிட்ட இயற்கையை கருத்திற்கொண்டும் ஐ.நாவின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டுவந்த வானிலை, காலநிலை மாற்றங்கள் பற்றிய பாரிஸ் மாநாட்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளையும் உடன்படிக்கைகளையும் செயற்படுத்துவதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இதன்போது இலங்கை ஒரு அங்கத்துவ நாடு என்றவகையில் இத்துறையில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்பதையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனது அன்புக்குரிய தாய்நாட்டின் உள்ளக நிலமைகளைப் பற்றி கவனத்தில் கொள்ளும் போது நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் ஜனநாயகம், மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், ஊடக சுதந்திரம் ஆகிய இவ்வனைத்து துறைகளும் பரந்தளவில் பலப்படுத்தப்பட்டிருக்கின்ற அதேநேரம், இன்றைக்கு 40 வருடங்களுக்கு முன்னர் நாடு இருந்த நிலமை தொடர்பிலும் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான நீண்ட கால பயங்கரவாதப் போரைப் பற்றி கவனம் செலுத்துகின்ற போதும்புலிகளின் பயங்கரவாதப் போர் முடிவுக்கு வந்து 10 வருடங்களாகின்றன.

இந்த 10 வருடங்களில் நாம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். குறிப்பாக எமது அரசு கடந்த மூன்றரை வருடங்களில், குறிப்பாக போரின் பின்னரான காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகளை பரந்தளவில் நிறைவேற்றியிருக்கிறோம்.

குறிப்பாக தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், மீண்டுமொரு போர் ஏற்படாது தடுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட செயற்பாடுகளை நிறைவேற்றியிருப்பதுடன், நிறைவேற்ற வேண்டிய விடயங்களை சிறந்த முறையில் முன்னெடுத்து வருகின்றோம்.

ஆகையால் மனித உரிமைகள் பற்றிய விடயத்தில் நாம் எமது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் மிகச்சிறந்த முறையிலும் பரந்தளவிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஒரு நாடு என்ற வகையில், எமக்குஅனைத்துநாடுகளினதும் ஐநா சபையினதும் ஒத்துழைப்புக்கள் மென்மேலும் கிடைக்கப்பெற வேண்டுமென நான் மிகவும் கௌரவமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

உலகத்தின் மிகவும் பலம் வாய்ந்த ஒரு பயங்கரவாத அமைப்பே இலங்கையின் பாதுகாப்புப் படையினரால் தோற்கடிக்கப்பட்டது. ஆகையால்தான் இன்று இலங்கை பிரிக்கப்படாத, சிதைவடையாத, நிலையான சமாதானத்தைக் கொண்ட ஒரு நாடாக இருந்து வருகின்றது.

ஆகையால் இலங்கையில் நிலையான சமாதானத்தையும் ஐக்கியத்தையும் மேலும் உறுதிப்படுத்துவதற்கு எமது பாதுகாப்பு படைகள், பலம்மிக்க பயங்கரவாத அமைப்பொன்றினை தோல்வியடையச்செய்த வரலாற்றுக் கடமையை மிகுந்த கௌரவத்துடன் ஞாபகப்படுத்துவதுடன், நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அவர்கள் மேற்கொண்ட அந்த பெரும் அர்ப்பணிப்புக்கு எனது நன்றியினையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அந்தப்போர் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் முடிவடையும் இந்த சந்தர்ப்பத்தில் இலங்கை மீது மதிப்பை கொண்டிருக்கும் அனைத்து உலக நாடுகளிடமும், எனது தாய்நாட்டை புதிய எண்ணத்துடனும் புதிய கண்ணோட்டத்துடனும் நோக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு பெரும் போர் முடிவுக்கு வந்து சமாதானம் நிலைத்து வரும், தேசிய நல்லிணக்கமும் ஒற்றுமையும் பலப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு நாட்டில் மீண்டும் ஒரு போர் ஏற்படுவதை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கும் ஒரு நாட்டில், மனித உரிமைகளை பரந்தளவில் பலப்படுத்தியிருக்கும் நாடென்ற வகையில், எதிர்கால பொருளாதாரசுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கு உகந்ததாக எனது நாட்டை பரந்த நல்லெண்ணத்துடன் நோக்குவதுடன் எமக்கு உங்கள் ஒத்துழைப்பை வழங்குங்கள் எனவும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நாட்டின் இறையாண்மையும் சுயாதீனத்தன்மையும் முக்கியமானதாகும். எனவே அதனைப் பாதுகாத்தவாறு எம்மால் முன்னெடுக்கப்படும் மனிதநேய செயற்பாடுகள், ஜனநாயகத்தை பலப்படுத்தும் செயற்பாடுகள் உள்ளிட்ட பரந்த பணிகளைசெயற்படுத்த உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை கேட்டுக் கொள்கிறேன்.

எமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு எம்மால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகளும் அர்ப்பணிப்புக்களும் மிக முக்கியமானவையாகும். எந்தவொரு வெளிநாட்டு தலையீட்டையும் அச்சுறுத்தல்களையும் ஒரு சுயாதீன நாடென்ற வகையில் ஏற்க நாம் தயாராக இல்லை.

அனைத்து வகையிலும் பலமானநாடுஎன்றவகையில்நான் உங்களிடம் கேட்டுநிற்பது, எமது பிரச்சினைகளைதீர்த்துக்கொள்வதற்கும், ஒரு சுயாதீன நாடு என்ற வகையில் எமது உரிமைகளை உறுதிப்படுத்தியவாறு முன்னோக்கிச் செல்வதற்கும் எமக்கு இடமளியுங்கள் எனக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகையால் இங்குள்ள நிலமைகளைக் கருத்திற்கொண்டு, இலங்கையர் என்ற வகையில் தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வோம் என்பதுடன், அதற்கு உங்களது ஒத்துழைப்பினை பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்வதுடன், எனது தாய்நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் சந்தேகம், பீதி, அவநம்பிக்கை ஆகியவற்றை இல்லாதொழித்து அனைத்து இனங்கள் மத்தியிலும் பலமான நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு என்ற வகையில் நாம் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு உங்களது ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு நான் ஏற்கனவே கூறியதைப் போன்று இலங்கையிலும் ஏனைய உலக நாடுகளிலும் வறுமையுடன் வாழ்ந்து வரும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாம் முக்கியத்துவத்தை கொடுக்க வேண்டும். புதிய தலைமுறையினரின் புதிய கருத்துக்களை செவிமடுத்து, அவர்களின் பிரச்சினைகளை தீர்த்துவைக்க வேண்டும்.

ஆகையால் இவ்வனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டு இலங்கையென்ற வகையில், புத்தபகவான் போதித்த பௌத்த சிந்தனைக்கமைய திரிபீடக நூலில் சங்யுத்த நிகாயவில் 36 – 6 ஆம் அத்தியாயத்தில் சல்ல சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கின்ற ஒருவரின் உடலில் ஒரு முள் பாய்ந்திருப்பின், அதனால் ஏற்படும்வேதனையைப்போலவே, அந்த முள் பாய்ந்ததனால் வேதனை ஏற்பட்டது என்ற சிந்தனையும் ஞாபகமும் கூட வேதனையை ஏற்படுத்தும்


அந்தவகையில் அவை இரண்டு வகையான வேதனைகளாகும். அதாவது முள் பாய்ந்ததால் ஏற்பட்ட ஒரு வேதனையும் அதன் ஞாபகம் ஏற்படுத்தும் வேதனையுமென அமைகின்றன.

ஆகையால் அவ்வனைத்து வேதனைகளையும் முள் பாய்ந்தவனாலேயே உணர முடியும்.

அந்த வகையில் இலங்கையும் நீண்டகால போருக்கு முகம் கொடுக்க நேர்ந்ததால் ஏற்பட்ட பிரச்சினைகளும் அதன் துர்ப்பாக்கியமான நிலமைகளும் மேற்குறிப்பிட்ட இருவகையான வேதனைகளையும் இலங்கையருக்கே ஏற்படுத்தியிருக்கின்றது. ஆதலால் அந்த வேதனைகள் வேறொரு பிரிவினருக்கன்றி, எமது நாட்டு மக்களுக்கே ஏற்பட்டிருக்கின்றன.

அந்த வேதனைகளை தணித்துக் கொள்வதற்கு நியாயமான, நீதிமிக்க, மனிதநேயம்மிக்க சமூகத்தில், ஜனநாயக ரீதியிலான வரலாற்று கடமைகளை நிறைவேற்றிவரும் நாடென்ற வகையிலும் பொருளாதார ரீதியில் சுபீட்சமிக்க ஒரு நாடாக திகழ்வதற்கும் நாம் எடுத்துவரும் அனைத்து முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பை பெற்றுத்தருமாறு மிகுந்த அன்புடனும் கௌரவத்துடனும் கேட்டுக்கொள்கிறேன் – என்றார். (ஐ)

# பாக். அணித் தலைவரை புகழுகின்றார் கங்குலி



பாகிஸ்தான்அணித்தலைவர் சப்ராஸ் அஹமட் ஒரு சிறந்த தலைவர் எனத் தெரிவித்துள்ள இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி, பாகிஸ்தான்கிரிக்கெட்சபை மற்றும்முன்னாள்கிரிக்கெட்வீரர்கள் சப்ராஸுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

14 ஆவது ஆசியக் கிண்ணத் தொடரில்பாகிஸ்தான்அணி இந்திய அணிக்கு எதிராக இரண்டு போட்டிகளில் விளையாடியது. இந்த இரண்டுபோட்டிகளிலுமே பாகிஸ்தான் அணி படுதோல்வியை தழுவிக் கொண்டது.

அது மாத்திரமல்லாது ஆப்கானிஸ்தான் அணியுடனான போட்டியின் போதும் இறுதி ஓவரிலே வெற்றிபெற்றது.

இதனால் பாகிஸ்தான் அணி வீரர்கள் மீதும், அணியின்தலைவர் சப்ராஸ் அஹமட் மீதும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகிறது.

இந் நிலையில், இந்திய அணியின்முன்னாள்தலைவர்சௌரவ் கங்குலி,சர்பராஸ்அஹமட்சிறந்த தலைவர்.

2017 ஆம் ஆண்டுக்கான சம்பியன்கிண்ணத்தைவெற்றிகொள்வதற்காக பாகிஸ்தான்அணியை தலைமைதாங்கிவழிநடத்தியவர், அவரை போன்ற வீரர்கள் தினம் தினம் பிறந்து வர மாட்டார்கள், அவர் தைரியமானவர்.

எனவே ஆசிய கிண்ண தோல்விகளால்அவர்மீதுமுன்வைக்கப்படும் விமர்சனங்களை எல்லாம் புறம்தள்ளிவிட்டு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியமும்,முன்னாள் வீரர்களும் சேர்ந்து அவரை ஆதரித்து ஊக்கப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இலங்கை அணியிலிருந்து மத்தியூஸ் அதிரடி நீக்கம்



எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரில் விளையாடவுள்ள இலங்கை கிரிக்கெட் குழாமிலிருந்து அஞ்சலோ மத்தியூஸ் நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள அஞ்சேலா மத்தியூஸை தற்போது இங்கிலாந்துடனான தொடரில் நீக்கியுள்ளமை சர்ச்சையை கிளப்பியுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு சிம்பாப்வே இலங்கைக்கு சுற்றுப் பயணம்மேற்கொண்டுவிளையாடியது. இதில் இலங்கை அணி படுதோல்வியைச் சந்திக்க அஞ்சலோ மத்தியூஸ் முதன்முறையாக பதவியிலிருந்து நீங்கினார்.

அதன்பிறகு மீண்டும் தலைமைப் பொறுப்பை ஏற்ற மத்தியூஸ், நடைபெற்று வரும் ஆசியக்கிண்ணத்தொடரில்அடைந்த படுதோல்வியின் பின்னர் தேர்வுக் குழு அவரைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கியது.

எனினும் தலைமைப் பதவி பறிபோனால் பறவாயில்லை. அணியில் இடம் கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பிலிருந்த அவருக்கு தேர்வுக்குழு மீண்டும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளது.

அதாவது தேர்வுக்குழுத் தலைவரான கிரஹம் லெப்ரோய், மத்தியூஸின் உடற் தகுதியில்லாத காரணத்தினால் இங்கிலாந்துடனான தொடரிலிருந்து அவரை நீக்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இது குறித்து தெரிவித்த மத்தியூஸ், உடற்தகுதிச் சோதனை நடத்தாமலே நான் உடற் தகுதியை இழந்து விட்டேன் என்று எவ்வாறு கூற முடியும். அவ்வாறு நான் உடற்தகுதியை இழந்து விட்டேன் என்று நீங்கள் கருதினால் நான் அதனை நிரூபித்துக் காட்டவும் தயார் என கிரஹம் லெப்ரோய்க்குப் பதிலளித்துள்ளார்.

இதுவரை 106 போட்டிகளுக்கு தலைமைப் பதவி ஏற்று வழிநடத்தியுள்ள மத்தியூஸ், 49 போட்டிகளில் வெற்றியையும் 51 போட்டிகளில் தோல்வியையும் தழுவிக் கொண்டுள்ளார். அத்துடன் இதில் ஒரு போட்டி வெற்றி, தேல்வியின்றி முடிவடைந்ததுடன், 5 போட்டிகள் மழையால் இரத்துச் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ரி-10 தொடரில் 6 இலங்கை வீரர்கள்




இரசிகர்களைக் குதுகலப்படுத்துவதற்கு நாளுக்கு நாள் கிரிக்கெட் போட்டிகள் பரிணாம வளர்ச்சியடைந்து வருகின்ற நிலையில், முதல்முறையாக 10 ஓவர்கள் கொண்ட 'ரி-10 தொடர்' கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

பலரின் எதிர்பார்ப்புக்கும் மத்தியில் இந்த தொடரில்,இயான் மோர்கன் தலைமையிலான கேரளா கிங்ஸ், முதல் மகுடத்தை சூடியது.

முதல் தொடருக்கே இரசிகர்கள் மத்தியில்நல்லவரவேற்புகிடைத்ததால்,தற்போது இரண்டாவது அத்தியாயமும் நடத்தப்படவுள்ளது.

இதற்கான அணிகளின்தேர்வு, வீரர்களின் தேர்வு தற்போது நடைபெற்று முடிந்துள்ளன. அந்த வகையில் இந்த தொடரில், மொத்தம் எட்டு அணிகள் பங்கேற்கின்றன. இதில் இன்னாள் மற்றும் முன்னாள் பிரபல வீரர்கள் பங்கேற்கின்றனர்.

கடந்த வருடம் ஆரம்பமான இத்தொடரில் இலங்கையின் லங்கா லயன்ஸ் அணி உட்பட, ஆறு அணிகள் போட்டியிட்டிருந்தன. ஆனால் இம்முறை லங்கா லயன்ஸ் அணிநீக்கப்பட்டுள்ள அதேவேளை, மேலும் மூன்று அணிகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் இம்முறை நடப்பு சம்பியனான கேரளா கிங்ஸ், பக்ஹதூன், மரதா அரேபியன்ஸ், பெங்கால்டைகர்ஸ், பஞ்சாபி லெஜன்ஸ் அணிகளுடன் புதிய அணிகளான ராஜ்பூட், கராச்சியன்ஸ் மற்றும் நொர்தன் வொரியர்ஸ் ஆகிய எட்டு அணிகள் பங்கேற்கின்றன.

இதில் இலங்கை அணியிலிருந்து இத்தொடரில் பங்கேற்க, லசித் மாலிங்க, இசுறு உதான, குசல் பெரேரா, நிரோஷன் டிக்வெல்ல மற்றும் தசுன் சானக ஆகிய ஆறு அணிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

லசித் மாலிங்க மரதா அரேபியன்ஸ் அணிக்காகவும், இசுறு உதான கராச்சியன்ஸ் அணிக்காவும், குசல் பெரேரா பெங்கால்டைகர்ஸ் அணிக்காகவும் விளையாடவுள்ளதுடன், நிரோஷன் டிக்வெல்ல மற்றும் தசுன் சானக ஆகியோர் கேரளா கிங்ஸ் அணிக்காக விளையாடவுள்ளனர்.

எனினும், இம்முறை இலங்கை அணியின் சில வீரர்களுக்கு இத்தொடரில் விளையாட முடியாத சூழ்நிலை ஏற்படும் என சந்தேகிக்கப்படுகிறது.

இத்தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் டிசம்பர் 2ஆம் திகதி வரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இறுதி டெஸ்ட் போட்டி, 23ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதனால் இலங்கை அணி வீரர்களில் லசித் மலிங்க மாத்திரம், இத்தொடரில் விளையாடுவதற்கான வாய்ப்புள்ளதுடன், ஏனைய வீரர்களின் நிலை சந்தேகத்திற்கிடமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் பயிற்சியாளர் பதவி விலகல்!




மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரான ஸ்டுவர்ட் லா, தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

49வயதான ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான ஸ்டுவர்ட் லா, கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம், அணியின் தலைமை பயிற்சியாளராகப் பதவியேற்றார்.

இந்நிலையில், எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக ஸ்டுவர்ட் லா, அறிவித்துள்ளார்.

ஸ்டுவர்ட் லா, கவுன்டி அணியான மிடில்செக்ஸ்க்கு பயிற்சியாளராக பணியாற்ற, நான்கு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதன் பின்னணியில் அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.


மேற்கிந்திய தீவுகள் அணியின் வீரர்கள் மற்றும் ஊழியர்களுடன் இணைந்து, பணியாற்றியதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணி, எதிர்வரும் மாதங்களில் இந்தியா மற்றும் பங்களாதேஷிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது. இந்த தொடர்களே ஸ்டுவர்ட் லாவுக்கு இறுதி தொடராக அமையவுள்ளது.

ஸ்டுவர்ட் லா தலைமையில் மேற்கிந்திய தீவுகள் அணி, பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு எதிரான தொடரை கைப்பற்றியது. அத்தோடு மிகமுக்கியமாக இங்கிலாந்து மண்ணில் 17 வருடத்திற்குப் பிறகு ஹெட்டிங்லேயில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றது.

இவ்வாறு மேற்கிந்திய தீவுகள் அணியின் பல வெற்றிகளுக்கு துணைநின்ற ஸ்டுவர்ட் லாவின், இந்த அறிவிப்பானது, மேற்கிந்திய தீவுகள் அணியின் வீரர்களும் கடும் மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

# கங்குலியின் புத்தகம் வெளியீடு




கிரிக்கெட் உலகில் புகழ் பூத்த வீரர், தங்களது அனுபவங்களையும், கடந்து வந்த பாதைகளையும் தொகுத்து, சுய சரிசை புத்தகங்களை வெளியிடுவது வழக்கம்.

அந்த வகையில், இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரான சவுரவ் கங்குலி, 'பு ளீளஜமிற்ஷதீ ஷ்வி ஜலிமி சிஜலிற்ஆஜ' என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.

இதில் தனது கிரிக்கெட் அனுபவம், மற்றும் கடந்த வந்த கடினமான பாதைகள், வீரர்களுடனான அனுபவங்கள் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.

இந்த புத்தக வெளியீட்டு விழா, நேற்று முன் தினம் சிம்பியோசிஸ் இன்டர்நேஷனலில் நடைபெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றிய அவர், கூறிய கருத்துக்கள் இவை,

கிரிக்கெட் உதைபந்து போட்டி போன்றது அல்ல. தற்போதுள்ள பெரும்பாலான பயிற்சியாளர்கள் உதைபந்தை பயிற்சியாளர்கள் இயக்குவது போல் இயக்கலாம் என்ற நினைப்பில் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால், கிரிக்கெட் அணித் தலைவர்களின்விளையாட்டு. பயிற்சியாளர் பின் இருக்கையில் இருக்க வேண்டும். இதுதான் முக்கியமானது.

எதிர்வரும் ஆஸ்திரேலியா அணியை, சொந்த மண்ணில் தோற்கடிப்பதற்கான தங்க வாய்ப்பு கோஹ்லிக்கு கிடைத்துள்ளது. இந்தியா இந்த வாய்ப்பை பயன்படுத்தி நிச்சமாகச் சாதிக்கும் என கூறினார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், இடது கை துடுப்பாட்ட வீரருமான சவுர் கங்குலி, தற்போதைய மேற்கு வங்காள கிரிக்கெட் சங்கத்தின் தலைவராகவும்,, கிரிக்கெட் வர்ணனையாளராகவும் இருந்து வருகிறார்.






# யாழ்ப்பாணத்தில் திலீபனின் உணர்வுபூர்வ நினைவேந்தல்














## யாழ். பல்கலைக் கழகத்தில்.....




# மரண அறிவித்தல்



## திருமதி இரத்தினகோபால் சுந்தரம்மா

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், மல்லிகை, காரைநகர் மற்றும் இல: (10) 26, பிள்ளையார் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினகோபால் சுந்தரம்மா அவர்கள் நேற்று (26.09.2018) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்ற ஆறுமுகம் இரத்தினகோபால் அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்றவர்களான சங்கரப்பிள்ளை – முத்துப்பிள்ளை தம்பதிகளின் அருமை புதல்வியும் சரவணமுத்து ஆறுமுகம் – பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் ஜெயராசா (Partner Supershoes, Unitel, Director - Srigajan (Pvt) Ltd) அவர்களின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிவராசாவின் சிறிய தாயாரும், கோமதி, தமிழ்ச்செல்வி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ரங்கஜன் (தரம் 11 – யாழ். இந்துக் கல்லூரி ), மனோறஜன் (தரம் 9 – யாழ்.பரியோவான் கல்லூரி), அஜித்குமார் (கனடா), விஜித்குமார் (கனடா), சருண்குமார் (கனடா), கிசோகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, நவரத்தினம், கமலாதேவி, சேதுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, கனகசபாபதி, இராஜகோபால் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.09.2018) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 8.30 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக காரைநகர், சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல: (10) 26, பிள்ளையார் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**இ.ஜெயராசா (மகன்)**
**0759283812, 0777283812**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.